வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.01.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 47 | பக்கங்கள் : 16




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

# வடக்கு - கிழக்கு எம்.பிக்களின் ஆதரவு ஜனாதிபதிக்கு ஒருபோதும் கிடையாது!

## சபையில் கூறினார் கஜேந்திரகுமார் எம்.பி.



கொழும்பு, ஜனவரி 21

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இனவாத நிகழ்ச்சி நிரலுக்கு வடக்கு-கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவு தரமாட்டார்கள்.”

- இவ்வாறு குறிப்பிட்டார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஜனாதிபதி கோட்டாபய, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற 69 லட்சம் வாக்குகளை காட்டிலும் வடக்கு - கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ள உறுப்பினர்கள், தமிழ் மக்களின் அதிக வாக்குகளை பெற்றுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

15

## பிரிட்டன் அமைச்சருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு!



கொழும்பு, ஜன. 21

தெற்கு மத்திய ஆசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு இடையில் சந்திப்

15

## தனியார் காணி ஊடாக வீதி அமைத்து பொய்ப் பிரசாரம் செய்கின்றது அரசு!

### வலி.வடக்கு தவிசாளர் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜன. 21

தனியார் காணிகள் ஊடாக அத்துமீறி பாதையை ஏற்படுத்தமுடியாது. உண்மையான வீதியூடாக அதனைச் செய்யவேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்து விட்டு வீதியை திறந்துவிட்டேன் என பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்று

15

## மனித உரிமைகள் நிலைவரம் பிரிட்டன் அமைச்சர் மகிழ்ச்சி

கொழும்பு, ஜன. 21

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மிக முன்னேற்றகரமாக உள்ளன என்று, பிரிட்டனின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் தாரிக் அஹமட் தெரிவித்தார்.

அதனை மேலும் வலுப்படுத்துவதற்கு, நடைமுறை மற்றும் இலக்குகளை அடையக்கூடிய அணுகுமுறைகளுடன் முன்னோக்கிச் செல்வதன் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து மனித உரிமை பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

15

## அமைச்சர்கள் தமது கருத்தை பொதுவெளியில் கூறக்கூடாது

### அமைச்சர் நாமல் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 21

அமைச்சர்கள் தங்களில் மனதில் உள்ள பிரச்னைகளை பொதுவெளியில் பேசுவது பொருத்தமற்றது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

## தீர்க்கமான முடிவை எடுக்க தேரர்களை சந்திக்கிறது சு.க.

கொழும்பு, ஜன. 21

கடுமையான அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசியும், ஆலோசனையும் பெறுவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இதன்பிரகாரம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் விரைவில் கண்டி சென்று, மகாநாயக்க தேரர்களை சந்திப்பார்களென கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன

15

## சாணக்கியனுக்கு கொரோனா உறுதி

மட்டக்களப்பு, ஜன. 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இதனை அடுத்து அவர் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார்.

15

## சுற்றுலாப் பயணிகளிடம் டொலர் அறவிட உத்தரவு

கொழும்பு, ஜன. 21

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சேவைகளை வழங்கும்போது அறவிடப்படும் தொகையை டொலர்களில் அறவிடுமாறு பதிவு செய்யப்பட்டுள்ள சுற்றுலா நிறுவனங்களுக்கு விசேட உத்தரவை இலங்கை மத்திய வங்கி பிறப்பித்துள்ளது.

இதன் ஊடாக நாட்டுக்குள் வரும் டொலர்

15

## பிரிட்டனிலுள்ள புலம்பெயர்ந்தோருடன் கலந்துரையாட சந்தர்ப்பம் கொடுங்கள்!

### பிரிட்டன் அமைச்சரிடம் ஜனாதிபதி கோரிக்கை



கொழும்பு, ஜன. 21

ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் புலம்பெயர் இலங்கையர்களுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதற்காகப் புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாட சந்தர்ப்பம்

15

## கோட்டாபய அரசால் வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்கின்றார்கள் இளைஞர்கள்!

### சபையில் சஜித் பிரேமதாஸ சாடல்



கொழும்பு, ஜன. 21

இலங்கையிலுள்ள இளைஞர்களை கோட்டாபய அரசு வெளிநாடுகளுக்கு துரத்தியுள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:-

நாட்டிலுள்ள பிரச்னைகள் இப் போது தீரவில்லை. ஆனால், பயங் கரவாதம், தேசிய பாது

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

வடக்கு, கிழக்கு மக்களின் நலன் கருதி அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியுள்ளார்.

அரசியல் பேதங்களை மறந்து அந்த மக்களுக்கு நன்மை தரும் வகையில் அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு ஆதரவு வழங்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய கொள்ளை விளக்க உரையிலேயே இந்த கோரிக்கையை விடுத்தார்.

அவரைப் பொறுத்தவரை இந்த நாட்டில் இனப் பிரச்னை என்ற ஒன்றே இல்லை. அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து யுத்தத்தை நடாத்தி முடித்த பின்னர், அவர் வழங்கிய பேட்டி ஒன்றில் இதனை தெரிவித்திருந்தார்.

'புலிகள் இப்போது இல்லைத்தானே, பிறகு என்ன பிரச்னை' என்ற தொனியில் அப்போது அவர் கூறியிருந்தார். அவரது பார்வையில் புலிகள் இல்லாமல்போன தோடு, நாட்டில் இனப்பிரச்னையும் இல்லாமல் போய் விட்டது என்பதுதான்.

பொருளாதார ரீதியாக வடக்கு தலைநிமிரும்போது, அங்குள்ள மக்களும் தலைநிமிர்ந்து விடுவார்கள் என்று நம்பும் ஒருவரிடமிருந்து, அவரது கொள்கை விளக்க உரையில் தீர்வு குறித்து அறிவிப்பார் என்று நம்பியது நமது தவறே.

அது அல்ல, இங்கே முக்கியத்துவம் உடையது.

அவரது பேச்சு தொடர்பாக பாராளுமன்றத்தில் நடக்கும் விவாதத்தில் கலந்துகொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணன் ஆபிரகாம் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் கூர்ந்து கவனிக்கப்படவேண்டியவை.

'அரசியல் உரிமையை பெற்றுத்தரவேண்டும் என்பதற்காகவே அன்றி, அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற, தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு ஆணையை வழங்க வில்லை' என்று சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

உண்மைதான், தமிழ் மக்கள் இந்த தேர்தலில் மாத்திரமல்ல, இதற்கு முன்னரும் நடந்த அனைத்து தேர்தல்களிலும் இதே ஆணையைத்தான் தந்தார்கள். அதிகம் ஏன், கடந்த 2015ஆம் ஆண்டு தேர்தலிலும் அதே ஆணையைத்தான் தந்தார்கள். ஆனால், அந்த ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் ஆணையை நிறைவேற்ற அரசியலமைப்பு ஒன்றை தயாரிக்கும் பணியில் கூட்டமைப்பு முழு மூச்சு டன் களமிறங்கியிருந்ததும் உண்மைதான். ஆனால், அந்தப் பணியை அவர்களால் மாத்திரம் செய்து முடிக்கமுடியாது என்பது அவர்கள் அறியாததல்ல. அவர்கள் தீர்வுக்காக என்னதான் தயாரித்தாலும், அதனை பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும், ஆக்கக் குறைந்தது மூன்றில் இரண்டு பெரும்பான்மையையாவது பெறவேண்டியிருக்கும் என்பதும் தெரியாததல்ல. அது முடியாத காரியம் என்பதும் குழந்தைகளுக்கும் தெரிந்த சங்கதி.

ஆனால், முடியாத ஒன்றுக்காக ஐந்து வருடங்கள் மல்லுக்கட்டிய நாம், அதைவிட முக்கியமாக ரணிலுக்கு நெருக்கடி வந்தபோதெல்லாம் அவரைப் பாதுகாப்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தினோம்.

அவரைப் பாதுகாக்க நாம் உதவிய போதிலும் கேவலம், கல்முனையில் தனியான பிரதேச சபை ஒன்றைக்கூட எம்மால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ரணில் அரசைப் பாதுகாப்பதற்காக சுமந்திரன் பம்பரமாக பணியாற்றினார். அப்போது அவரது மக்கள் அவருக்கு வழங்கிய ஆணை அவருக்கு நினைவில் நின்றிருக்குமோ தெரியவில்லை.

கடந்த தேர்தலில், அவர் நல்லாட்சி அரசாங்கத்திற்காக பணியாற்றியதும், அதற்கு கூட்டமைப்பு அனுமதித்த அந்த ஐந்தாண்டுகால செயற்பாடுகளுமே கூட்டமைப்பிற்கு பாரிய தோல்வியை பரிசளித்தது என்பதும் விவாதத்திற்குரியதல்ல.

ஆனாலும், கடந்த தேர்தலில் கூட்டமைப்பிற்கு வாக்களித்தவர்கள், அவர்களின் ஐந்தாண்டுகால செயல்பாடு களை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே.

ஆக, சுமந்திரனின் அந்த ஐந்தாண்டுகால நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே அவருக்கு வாக்களித்தனர்.

ரணில் அரசோடு அவர் எப்படி பணியாற்றினாரோ, அதேபோல இந்த அரசோடும் பணியாற்றுவார் என்று நம்பியதாகவும் அதனை எடுத்துக்கொள்ளலாம்!.

ஆனால் அவரோ தமிழ் மக்கள் தமக்குத் தந்த ஆணை வேறு என்கிறார்.

அப்படியெனில், ஆட்சியிலிருப்பவர்களுக்கு ஏற்ப அரசியல் செய்யுங்கள் என்பதுதான் தமிழ் மக்கள் தமக்கு தந்த ஆணை என்கிறாரா? அல்லது கடந்த ஆட்சியில் விட்ட தவறை இனியும் நாங்கள் செய்ய தயாராக இல்லை என்கிறாரா?

- ஊர்க்குருவி

# அரசியல் கலாசாரம் மாற்றப்படவேண்டும்

## சபையில் வலியுறுத்தினார் பொன்சேகா



**கொழும்பு, ஜன. 21**

**இலங்கையில் அரசியல் கலாசாரம் மாற்றப்படவேண்டும் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வலியுறுத்தியுள்ளார்.**

இதற்காக நாட்டின் இளைஞர் யுவதிகள் உட்பட்ட பொது மக்கள், எதிர்காலத்தில் சிந்தித்து செயல்படவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இளைஞர், யுவதிகள் இந்த மாற்றத்தை எதிர்பார்த்த போதும் அவர்கள் ஏமாற்றப்பட்டனர். எனவே எதிர்காலத்தில் பொதுமக்கள் தூரநோக்கத்துடன் செயற்படவேண்டும்.

அரசமைப்பு இல்லாத நாடாக இங்கிலாந்து இருக்கின்றபோதும் இங்கிலாந்தில் ஜனநாயகம் சிறப்பாக பேணப்படுகிறது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸ், வெளிநாடு ஒன்றுக்கு சென்றிருந்தபோது ஆதரவாளர் ஒருவரையும் அழைத்துச்சென்றார் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோது அவர் தமது பதவியில் இருந்து விலகிக் கொண்டார்.

எனினும் இலங்கையின் அரசியல்வாதிகள், வெளிநாடுகளுக்கு செல்லும்போது தமது வளர்ப்புப்பிராணிகளையும் கொண்டு செல்கின்றனர்.

இங்கிலாந்தின் இளவரசர் அன்றூ மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவர் மீதான விசாரணை ஆரம்பிக்கும் முன்னரே, அவர் வகித்து வந்த அட்மிரல் பதவியை மஹாராணி ரத்துச் செய்தார்.

எனினும் இலங்கையில் 11 பேரை கடத்திச்சென்று கொலை செய்த அட்மிரல் ஒருவருக்கு ஐந்து நட்சத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன-என்றார்.

(அ)

## எரிபொருள் நெருக்கடியானது விமான சேவையை பாதிக்காது

கொழும்பு, ஜன. 21

எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியானது ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் அல்லது நாட்டிலுள்ள ஏனைய விமான சேவைகளை பாதிக்காது என விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் நிறுவனத்திடம் அடுத்த ஒன் றரை மாதங்களுக்கு போதுமான எரிபொருள் இருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த வாரத்தில் எரிபொருள் கொள்வனவுக்காக 32 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டதாகவும், எதிர்காலத்தில் எரிபொருள் கொள்வனவுக்கான முன் பதிவுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், அத்துடன் எரி பொருளை கொள்வனவு செய் வதற்கு ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸிடம் டொலர் கையி ருப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இந்தியாவுடன் செய்த உடன்படிக்கை எங்கே?

## அமைச்சரிடம் கேட்டார் கிரியெல்ல

கொழும்பு, ஜன. 21

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்குவது சம்பந்தமான உடன்படிக்கை எங்கே என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டிய அந்த உடன்படிக்கையானது, பாராளுமன்றம் மூடப்பட்டிருந்த சமயத்தில் இரகசியமாக கையெழுத்திடப்பட்டுள்ளது. அதனை உடனடியாக சபையில் சமர்பிக்குமாறும் கிரியல்ல, அமைச்சரிடம் கோரினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் கம்மன்பில, அந்த உடன்படிக்கையை இந்த சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாம் என சபாநாயகர், தனக்கு அறிவித்தார் எனக் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது சம்பந்தமாக நான் கடந்த வாரம் எழுத்து மூலம் சபாநாயகருக்கு அறிவித்தேன். தற்போது நடக்கும் பாராளுமன்றக் கூட்டம் ஜனாதிபதியின் சிம்மாசன உரை தொடர்பானது என்பதால், அடுத்த பாராளுமன்றக் கூட்டத்தில் அதனை சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் அறிவித்தார். இதனால், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடும்போது, குறித்த உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளேன்-என்றார்.

அமைச்சர் கம்மன்பில தொடர்ந்தும் பொய் கூறி வருவதால், அவர் நாட்டில் நகைப்புக்கு உள்ளாகியுள்ளார் என கிரியெல்ல குறிப்பிட்டார்.

# மின் பொறியியலாளர்களின் போராட்டம் தொடர்கின்றது

கொழும்பு, ஜன. 21

தமது கோரிக்கைகளுக்கு உரிய அதிகாரிகள் தீர்வை வழங்கும் வரை சட்டப்படி வேலை செய்தல் போராட்டத்தை தொடர்வதாக இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை முதல் சட்டப்படி வேலை செய்தல் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

புதிதாக நியமிக்கப்பட்ட பொது முகாமையாளரை உடனடியாக பதவி நீக்கம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரான சரித் ஜயநாத் தயாரத்ன தெரிவித்தார்.

அவர்களின் கோரிக்கைகள் மின்சார சபையின் கவனத்துக்குக் கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே கூறினார். சில அதிகாரிகளை நீக்குவது நீதிமன்றத் தீர்ப்பின் அடிப் படையில் மாத்திரமே இருக்கும் என்றும், அதன் அடிப் படையில் புதிய அதிகாரிகளை நியமிப்பது குறித்து அமைச்சு தீர்மானிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
21.01.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், தை 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## அரசாங்கத்தின் பொறுப்பு கூறல்?

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயத்தில் உறுதியுடன் இருப்பதாகவும், உள்நாட்டுப் பொறிமுறைகளின் ஊடாக பிரச்னைகளை கையாளவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றார். பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் உள்நாட்டு பொறிமுறைகளை நிராகரித்து வருகின்ற நிலையில்தான், பீரிஸ் போன்றவர்கள் உள்நாட்டு பொறிமுறைகள் தொடர்பில் பேசி வருகின்றனர்.

ஒரு அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை முதலில் சம்பாதிக்க வேண்டும் - அதன் பின்னர்தான் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பில் பேசவேண்டும். ராஜபக்ஷக்களின் அரசாங்கத்தை பொறுத்தவரையில் இறுதி முடிவுகள் அவர்களாலேயே எடுக்கப்படும். அவர்கள் எடுக்கும் தீர்மானங்களுக்கு விளக்கமளிப்பவர்களாகவே ஏனையவர்கள் இருப்பதுண்டு. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் அனைத்து முடிவுகளும் மஹிந்த ராஜபக்ஷ வினாலேயே எடுக்கப்பட்டது. அந்த முடிவுகளுக்கு விளக்கமளிக்கும் வேலையையே பீரிஸ் செய்து கொண்டிருந்தார். இப்போதும் அதே பணியையே செய்கின்றார்.

ரணில்-மைத்திரி அரசாங்கம் விடயங்களை செய்து முடிக்காவிட்டாலும் கூட, பொறுப்புக்கூறலை கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. அந்த அடிப்படையில் பல நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருந்தது. ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் மனித உரிமைகள் விவகாரத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளவில்லை. யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை அனைவருக்குமான ஒரு பாதிப்பாகவே முன்வைக்க முயற்சிக்கின்றது.

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் அரசாங்கத்துக்கு எந்தவொரு நாட்டமும் இல்லை. ஜனாதிபதியின் கொள்கை உரை இதனை தெளிவாகவே எடுத்துரைக்கின்றது. இந்த ஆட்சியாளர்களை பொறுத்தவரையில் - இன்றைய சூழலில் பொருளாதார பிரச்னை ஒன்றுதான், நாட்டிலுள்ள ஒரேயொரு பிரச்னையாகும். தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேக அரசியல் பிரச்னையில்லை. வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தால் அனைத்து பிரச்னைகளும் இல்லாமல் போய்விடுமென்றே அரசாங்கம் கருதுகின்றது.

அரசாங்கத்தின் இவ்வாறான அணுகுமுறைக்கு என்ன காரணம்? இலங்கையின் மீது இதுவரையில் கொடுக்கப்பட்ட சர்வதேச அழுத்தங்கள் பலவீனமாக இருப்பதே இதற்கான காரணமாகும். இந்த அழுத்தங்களை வெற்றிகரமாக தங்களால் சமாளிக்க முடியுமென்றே அரசாங்கம் கருதுகின்றது. ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் - இலங்கையின் மீது இதுவரையில் எட்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இத்தனைக்கு பின்னரும், அரசாங்கம் பொறுப்பு கூறல் விடயத்தில் இந்தளவு பாராமுகமாக இருக்கிறதென்றால், சர்வதேச நீதிப் பொறிமுறை அந்தளவுக்கு பலவீனமாக இருக்கின்றது என்பதே இதன் பொருளாகும். எனவே அளவுக்கதிகமாக சர்வதேச பொறிமுறை தொடர்பில் தமிழர் தரப்புக்கள் கற்பனைகளில் மூழ்குவதும் பயனற்றது என்பதுதான் இதன் மூலம் கிடைக்கும் படிப்பினை.

# இந்திய குடியரசு தினத்தில் ராணி வேலு நாச்சியார், சுபாஸ் சந்திரபோஸ், பாரதியார், கப்பலோட்டிய தமிழர் புறக்கணிப்பு!

**அலசுவது இராஜதந்திரி**

இந்தியாவின் 75ஆவது குடியரசு தினம் எதிர்வரும் 26ஆம் திகதி புதுடில்லியில் கொண்டாடப்படவுள்ளது.

இந்தியாவின் குடியரசு தினம் கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்களினதும் பாரம்பரியங்கள். கலை, கலாசாரங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவதாக புதுடில்லியில் அலங்கார ஊர்திகள் பங்கேற்பது வழக்கமான நிகழ்வாக இருந்து வருகின்றது.

இருந்தபோதிலும் இத்தடவை தமிழ் நாடு, மேற்கு வங்காளம், கேரள மாநிலங்களின் ஊர்திகள் புதுடில்லியில் இடம்பெறுகின்ற குடியரசு தின வைபத்தில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக மூதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் மேற்கு வங்காள முதலமைச்சர் மமதா பனர்ஜி ஆகியோர் இந்திய மத்திய அரசிடம் தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்தியா பிரிட்டிஷாரினால் 1857-ம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டு வரை ஆளப்பட்டிருந்தது. இக்காலப்பகுதியிலேயே இந்தியாவில் பிரட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக போராட்டங்களும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வெடித்திருந்தன.

இந்திய சுதந்திர போராட்டத்தில் தமிழகம் மற்றும் மேற்கு வங்காளம், கேரளம் ஆகிய மாநிலங்கள் வழங்கிய பங்களிப்பை வெளிப்படுத்தும் விதத்திலும் இந்திய சுதந்திரத்துக்காக இம்மாநிலங்களைச்சேர்ந்த சுதந்திர போராட்ட வீரர்களின் அர்ப்பணிப்பை கௌரவிக்கும் விதத்திலுமே அலங்கார ஊர்திகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இருந்தபோதிலும் இத்தடவை இந்திய மத்திய அரசு எதிர்பார்த்து வெளியிட்ட ஊர்திகளின் வடிவமைப்பை தமிழகம், மேற்கு வங்காளம், கேரளம் ஆகிய மாநிலங்கள் புறக்கணித்து தமது விருப்பங்களை பிரதிபலிக்கும் விதத்திலேயே ஊர்திகளை வடிவமைத்திருந்தன என்று இந்திய மத்திய அரசின் குடியரசு தின ஊர்திகளுக்கான தெரிவுக்குழு தெரிவித்துள்ளது.

ஆயினும் இக்காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இதேபோல மேற்கு வங்காள முதலமைச்சர் மமதா பனர்ஜி இந்திய சுதந்திர போரட்டத்தில் 'வங்கச் சிங்கம்' என்று வர்ணிக்கப்பட்ட சுபாஷ் சந்திரபோஸ் வழங்கிய பங்களிப்பை நிராகரித்தது குறித்து தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவில் 28 மாநிலங்களும் 8 யூனியன் பிரதேசங்களும் இருக்கின்றன. 28 மாநிலங்களும் சமஷ்டி அடிப்படையில் மாநில சுயாட்சியைக்கொண்டிருக்கின்றன. யூனியன் பிரதேசங்கள் இந்திய ஜனாதிபதியின் மேற்பார்வையைக்கொண்ட ஒரு நிர்வாக கட்டமைப்பை கொண்டுள்ளன.

உலகிலேயே மிக உன்னதமான மத, மொழி, சமூக, கலாசார பரம்பலைக்கொண்ட தேசமாக இந்தியா விளங்குகின்றது. அத்துடன் இமயம் முதல் கன்னியாகுமரி வரை பல்வேறுபட்ட காலநிலைத்தன்மைகளைக் கொண்டதே இந்தியாவாகும்.

ஒவ்வொரு மாநிலத்தினதும் வரலாறு, கலையம்சங்கள் என்பவற்றை பிரதிபலிப்பவையாகவே இந்திய குடியரசு தின விழாவில் ஆயிரக்கணக்கானோர் முன்பாக புதுடில்லியில் அலங்கார ஊர்திகள் வலம் வருகின்றன. பல்லவர் ஆட்சியில் தமிழகத்தில் நிர்மாணிக்கப்பட்ட மாமல்லபுரம் சிற்பங்களை வெளிப்படுத்துவதாகவும் தமிழக ஊர்திகள் புதுடில்லி குடியரசு தின ஊர்வலத்தில் ஒரு தடவை பங்கேற்றிருந்தன.

ஆனால் இத்தடவை புதுடில்லியல் குடியரசு தின வைபவத்தில் தமிழக, மேற்கு வங்காள , மற்றும் கேரள மாநிலங்களின் ஊர்திகள் புறக்கணிக்கப்பட்டமை குறித்து அரசியல் ரீதியான கண்ணோட்டங்களும் வெளியிடப்பட்டுள்ளன. தமிழகம், மேற்கு வங்காளம் மற்றும் கேரளம் ஆகியவை இந்தியாவின் ஆளுங்கட்சி சார்பானவையாக இல்லாதிருப்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும் தமிழகத்தின் வீரபாண்டிய கட்டப்பொம்மன், ராணி வேலு நாச்சியார், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரபிள்ளை, வாஞ்சிநாதன் ஆகியோர் தமிழகத்தை சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களது வீரம், ஆளுமை, தேசப்பற்று ஆகியவை தமிழ் கூறும் நல்லுலகம் எங்கிலும் போற்றப்படுகின்றது.

இதுதவிர இந்திய சுதந்திரப்போராட்ட வீரர் சுபாஷ்சந்திரபோஸ் இலங்கைத்தமிழர்களாலும் மதிக்கப்படுபவராகவே இருக்கின்றார்.

இந்நிலையில் இந்திய சுதந்திரத்துக்காக வீர தீரத்துடன் பங்களித்த வங்கம், தமிழகம், கேரளம் ஆகிய மாநிலங்களின் சுதந்திர புருஷர்கள் இத்தடவை இந்திய குடியரசு தின விழாவில் புறக்கணிக்கப்படுவது இந்திய மத்திய அரசு தனது மாநிலத்தவர்களின் உணர்வலைகளை சரிவர புரிந்து கொள்ளவில்லையோ என்றே எண்ணத்தோன்றுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

புதிய முயற்சி சாதகமாகும். எதிர்பாராத செலவுக்கு வாய்ப்பு உண்டு. வருமானம் திருப்தி தரும். இன்று முக்கிய நபரின் சந்திப்பு ஏற்படும். அன்போடு பழகிய ஒருவர் உங்களின் மனக்குழப்பத்தை அகற்றுவார்.

**இடபம்**

கடன் பிரச்னை தீரும். உங்களின் ஆசை ஒன்று நிறைவேறும். வீட்டில் இதுவரை தள்ளிப்போன சுபவிஷயம் இன்று முடிவாகும். பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பக் கவலை தீரும்.

**மிதுனம்**

வாழ்வில் மகிழ்ச்சி அளிக்கும்படியான திருப்பம் வரும். மேலதிகாரிகள் உங்களுக்குப் பரிந்து பேசி நலம் அளிப்பர். இளைஞர்களுக்கு நல்ல விஷயம் நடைபெறும். மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**

உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திட்ட ஒருவரைச் சந்திக்க நேரிடும். எதையும் திட்டமிட்டு கால நேரம் தவறாமல் செயல்படுங்கள்ஆயில்யம்: குடும்ப சந்தோஷம் கூடுதலாகும். சேமிப்பு அதிகரிக்கும்.

**சிம்மம்**

ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். சுபச்செய்தி வந்து மகிழ்விக்கும்.சரியான ஓய்வு கிடைக்காமல் சோர்வடைந்த நிலை மாறும். செலவுகள் அதிக மாகாமல் பார்த்துக்கொள்வீர்கள்.

**கன்னி**

பழைய தவறெல்லாம் தொடராதபடி கவனமாக இருப்பீர்கள்.எந்தவொரு வேலையையும் கவன முடன் செய்வது அவசியம். தைரியமாக முடிவெடுப்பீர்கள். சொந்த வீட்டுக்குக் குடி போவீர்கள்.

**துலாம்**

குடும்பத்தில் இன்று கலகலப்பான சூழல் உருவாகும். பிறருடன் அன்பாகப் பேசுவதன் மூலம் பிரச்னைகளை தீர்க்கலாம், மகிழ்ச்சி தரும் செய்தி வரும். நட்பு வட்டம் விரியும்.

**விருட்சிகம்**

இன்று மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாதீர்கள். பேச்சு, செயல்பாடுகளில் கவனமாக இருப்பது மிகவும் நல்லது. சுபச்செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சி தரும். சருமப்பாதுகாப்பு அவசியம்.

**தனுசு**

வாழ்க்கைத்துணை வழி உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். துறையில் கடுமையாக முயற்சி செய்து வெற்றி பெறுவீர்கள். உறவினர்களை விட்டுக்கொடுக்காமல் உறுதியாக இருப்பீர்கள்.

**மகரம்**

அடுத்தவர் சுதந்திரத்தில் தலையிட வேண்டாம். புத்திக்கூர்மையால் கடினமான பணிகளைக்கூட எளிதாக முடிப்பீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வரன்கள் தேடி வரும்.

**கும்பம்**

தொழில் தொடங்குவோர் ஆலோசித்து முடிவு எடுக்கவும். பணிச்சுமை அதிகமாகலாம். பேச்சில் கவனம் தேவை. சிலருக்கு தந்தை வழி உறவினர் மூலம் உதவி கிடைக்கும்.

**மீனம்**

விரும்பிய இடத்தில் பணிபுரிய வாய்ப்பு வரலாம். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வரவு திருப்தியளிக்கும். நிலுவைப் பணிகளை செய்து முடித்து நிம்மதி காண்பீர்கள்.

# கச்சதீவுப் பகுதியில் மீன் பிடிப்பதற்கான எமது உரிமையை பெற்றுத் தர வேண்டும்

## இராமேஸ்வரம் மீனவர் மு.க.ஸ்டாலினிடம் மனு

சென்னை, ஜன. 21

இராமேஸ்வரம் அனைத்து விசைப்படகு மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தமது கோரிக்கை அடங்கிய மனுவை நேற்று கையளித்தனர்.

இராமேஸ்வரம் மீனவர்களுக்கு சொந்தமான 75 படகுகளை கடந்த 4 ஆண்டுகளாக இலங்கை கடற்படை கைப்பற்றி நீதிமன்ற உத்தரவின் பெயரில் தடுத்து வைத்த சமயம் அவை அழிவடைந்தன.

இதே நேரம் கடந்த டிசம்பர் மாதம் 19ஆம் திகதி கைது செய்யப்பட்ட 68 மீனவர்களில் 12 பேர் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தொடரும் நெருக்கடிக்கு கச்சதீவு பகுதியில் மீன் பிடிக்கும் எமது உரிமையை பெற்றுத் தர வேண்டும் உள்ளிட்ட பல



கோரிக்கை அடங்கிய மனுவை கையளித்துள்ளனர்.

# அலங்கார ஊர்தி நிராகரிப்பு விடயத்தில் அரசியல் ஆதாயம் தேடும் தி.மு.க. அரசு!

## வானதி சீனிவாசன் குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 21

அலங்கார ஊர்தி நிராகரிப்பு விவகாரத்தில் திமுக அரசு அரசியல் ஆதாயம் தேடுவதாக கோவை தெற்கு பாஜக எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் விமர்சித்துள்ளார்.



புதுடில்லியில் நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பில் தமிழக அரசின் அலங்கார ஊர்தி நிராகரிக்கப்பட்டதை அடுத்து, தமிழகத்தில் நடைபெறும் குடியரசு தின விழாவில் பங்கேற்கும் எனத் தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். இதனிடையே மாநிலத்தின் அலங்கார ஊர்தி நிராகரிக்கப்பட்டதற்கு திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகள் மத்திய அரசை கடுமையாக விமர்சித்து வருகின்றன.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்துள்ள வானதி சீனிவாசன், "தமிழக அரசின் அலங்கார ஊர்தி இடம் பெறாதது குறித்து திமுகவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் வேண்டுமென்றே திட்டமிட்டு அவதூறு பிரச்சாரத்தில் இறங்கியிருக்கின்றன" என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர், "பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகளின் அலங்கார ஊர்திகள் குடியரசு தின அணிவகுப்பில் இடம் பெற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 28 மாநிலங்கள், 7 யூனியன் பிரதேசங்கள், மத்திய அமைச்சகங்கள், மத்திய அரசு நிறுவனங்கள் அலங்கார ஊர்திக்கு விண்ணப்பித்து இருந்தாலும் 12 ஊர்திகள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஆனால் உண்மையை மறைத்து அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியின் ஒரு பகுதியாக திமுக அரசின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

எனினும் சுதந்திரப் போராட்ட வீரர்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் எந்தவொரு முயற்சியையும் வரவேற்கிறோம். இந்த அலங்கார ஊர்தியைக் குக்கிராமங்கள் வரை கொண்டு செல்ல வேண்டும். அனைத்து மாவட்டத்திற்கு ஒரு அலங்கார ஊர்தியை, தமிழக அரசு ஏற்பாடு செய்து தமிழகம் முழுவதும் வலம் வரச் செய்ய வேண்டும்.

வ.உ. சிதம்பரம் பிள்ளை, வேலுநாச்சியார் போன்ற விடுதலைப் போராட்ட தலைவர்களின் வீர வரலாற்றையும், அவர்களின் தேசியம், தெய்வீகம் தாங்கிய கருத்துக்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க முதல்வர் எடுத்துள்ள முயற்சிகளை வரவேற்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# உள்ளாட்சி தேர்தலுக்கு துணை இராணுவத்தின் கண்காணிப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்

## அதிமுக, பா.ஜ.க. வலியுறுத்தல்

சென்னை, ஜன. 21

"உள்ளூராட்சி தேர்தலுக்கு துணை இராணுவப் படையை வரவழைத்து நேர்மையாக நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

தேர்தல் திகதியை முறையான அவகாசத்தோடு அறிவிக்க வேண்டும்" என அதிமுக, பா.ஜ.க. வலியுறுத்தியுள்ளன.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாக தமிழகத்தின் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளின் ஆலோசனைக் கூட்டம் நேற்று சென்னை கோயம்பேட்டிலுள்ள மாநில தேர்தல் ஆணைய அலுவலகத்தில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

திமுக சார்பில் கிரிராஜன், அதிமுக சார்பில் பொள்ளாச்சி ஜெயராமன், காங்கிரஸ் சார்பில் தாமோதரன், பா.ஜ.க. சார்பில் கரு.நாகராஜன் தியாகராஜன் என்று அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.கவின் கிரிராஜன், "தேர்தலை ஒரே கட்டமாக நடத்த வேண்டும். கொரோனா விதி முறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் வலியுறுத்தப்பட்டது" என்று கூறினார்.

அதிமுக சார்பில் கலந்து கொண்ட பொள்ளாச்சி ஜெயராமன், "தேர்தல் ஒரேகட்டமாக நடத்தப்படவேண்டும். துணை இராணுவப் படையினரை முழுமையாகப் பயன்படுத்தி அவர்களின் கண்காணிப்பில் தேர்தல் நடக்க வேண்டும். கோவை, சென்னையில் வாக்காளர் பட்டியலில் பல குளறுபடிகள் இருக்கின்றன.

இதுகுறித்து ஆதாரங்களுடன் புகார் அளித்திருக்கிறோம்" என்று வலியுறுத்தினார்.

பாஜக சார்பில் பேசிய கரு. நாகராஜன், "அனைத்துக் கட்சிகளும் ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம். தேர்தலுக்கு துணை இராணுவப் படையை வரவழைத்து நேர்மையாக நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும். தேர்தல் தேதியை முறையான அவகாசத்தோடு அறிவிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

# இது சர்வாதிகார ஆட்சி!

## கடுமையாக விமர்சிக்கிறார் சந்திரிகா



கொழும்பு, ஜன. 21

**"ஆபிரிக்காவிலுள்ள சில ஏகாதிபத்திய நாடுகளில் நடப்பதுபோல்தான் தற்போது இலங்கையிலும் நடக்கின்றது." - என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் விமர்சித்துள்ளார்.**

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக தற்போதைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று முன்தினம் அழைக்கப்பட்டிருந்தார். அவரிடம் மூன்று மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சந்திரிகா அம்மையார்,

"இவர்கள் (ஆட்சியாளர்கள்) அனைத்து தவறுகளையும் செய்துவிட்டு தற்போது நல்லவர்கள்போல் செயற்பட்டுவருகின்றனர். அவர்கள் இழைந்த தவறுகளை, குற்றங்களை சுட்டிக்காட்டியவர்களை, குற்றவாளிகளாக்குவதற்கான முயற்சி இடம்பெற்று வருகின்றது.

நியாயமான விசாரணைகளின் பின்னர் யாராவது, தவறிழைத்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டால் அல்லது வழக்கு தொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவந்தால், தான் பழிவாங்கப்பட்டுள்ளதாகக் கூறி, விசாரித்தவர்களை தண்டிப்பது உலகில் வேறு எங்கும் நடக்காது.

சர்வாதிகாரிகள் உள்ள ஒரு சில ஆபிரிக்க நாடுகளிலேயே இப்படி நடக்கும்." - என்றார். (அ)





# உயர்மட்ட குழுவுடன் இலங்கை வந்த தென்கொரிய சபாநாயகர்

கொழும்பு, ஜன. 21

தென் கொரிய சபாநாயகர் பார்க் பியோங் சூக் உள்ளிட்ட 18 பேர் அடங்கிய தூதுக்குழு 04 நாட்கள் உத்தியோகபூர்வ விஜ யம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு நாட்டை வந்தடைந்தது.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினரால் தென் கொரிய சபாநாயகர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்கப்பட்டனர்.

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட உயர்மட்ட அரச அதிகாரிகளை தென் கொரிய சபாநாயகர் சந்திக்கவுள்ளார்.

மேலும், இலங்கை பாராளுமன்றத்துக்கும் தென் கொரிய சபாநாயகர் விஜயம் செய்யவுள்ளார். (அ)

# சுதந்திர தினத்தன்று ரஞ்சன் பொதுமன்னிப்பில் விடுதலை?

கொழும்பு, ஜன. 21

சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியை தொலைபேசி வழியாக நேற்று முன்தினம் தொடர்புகொண்ட சஜித், மனித நேயத்தின் அடிப்படையில் இந்த முடிவை எடுக்குமாறும் கோரியுள்ளார் என தெரியவருகின்றது.

இந்த கலந்துரையாடலின் பின்னர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்ற சஜித், ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து சுகநலம் விசாரித்துள்ளார். ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில் கிட்டும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

அதுமட்டுமல்ல ரஞ்சனின் விடுதலைக்காக சர்வதேசம் செல்லக்கூட தயாராகவே இருக்கின்றோம் எனவும் சஜித் அறிவித்துள்ளார்.

அதேவேளை, எதிர்வரும் சுதந்திர தினத்தில் ரஞ்சன் விடுவிக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# கொழும்புத்துறைமுக நகர் கொத்தணி; பரிசோதனை நடவடிக்கை கட்டாயம்

கொழும்பு, ஜன. 21

நீண்ட நாட்கள் வார விடுமுறையின்போது கொழும்புத்துறைமுக நகரை பார்வையிடுவதற்கு அதிகளவான மக்கள் ஒன்றுகூடியதை அடுத்து "கொழும்பு துறைமுக நகர் கொத்தணி" ஏற்படும் அச்சுறுத்தல் நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நீண்ட நாள் வார விடுமுறையின்போது பல்வேறு பயணங்களில் ஈடுபட்டிருந்த மற்றும் மக்கள் பெருமளவு கூடிய இடங்களில் இருந்தவர்களுக்கு காய்ச்சல் அல்லது சுவாசம் தொடர்பிலான நோய் நிலைமை அவதானிக்கப்படும் பட்சத்தில் விரைவில் வைத்திய பரிசோதனையை மேற்கொள்வது முக்கியமென்று விஷேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கோவிட் தொற்றுக்குள்ளான நோயாளிகளுக்கான ஒட்சிசன் தேவையில் சிறிய அளவு அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலை சுகாதார கட்டமைப்புக்கு அழுத்தமாக இல்லாத போதிலும் இந்த நிலை மேலும் அதிகரிப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# சரத் வீரசேகரவுக்கு கொரோனா உறுதி

கொழும்பு, ஜன. 21

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

அமைச்சருக்கு கொவிட் தொற்று இருப்பது நேற்றுக் காலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் கடற்படைத் தளபதியான சரத் வீரசேகர, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார். (அ)

# பாடசாலை மாணவனின் மீது புதுக்குடியிருப்பில் தாக்குதல்

## முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதி

முல்லைத்தீவு, ஜன. 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பாடசாலை மாணவன் ஒருவன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கல்விகற்கும் உயர்தர மாணவன் கௌரிதாசன் கரிஸ்(வயது-17) கடந்த 18ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடு திரும்பியபோது வீதியில் வைத்து அந்த மாணவன் மீது இளைஞர் ஒருவர் மூர்க்கத்தனமான தாக்குதல் நடத்தியுள்ளார். காயமடைந்த மாணவன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மாணவன் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்றுவருகிறார்.

மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையிலும் புதுக்குடியிருப்பு பொலிஸார் தாம் செய்த முறைப்பாடு தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தாக்குதல் நடத்திய இளைஞரை கைது செய்யவில்லை என்றும் மாணவனின் பெற்றோர் குற்றம் சுமத்துகின்றனர். (அ)

# சீனாவின் செல்லப்பிராணியாக இருக்காது இந்தியாவின் செல்லப்பிள்ளையாகுங்கள்!

## அரசிடம் கோருகிறார் இராதாகிருஷ்ணன் எம்.பி.

கொழும்பு, ஜன. 21

"சீனாவின் செல்லப் பிராணியாக இருப்பதை விடுத்து இந்தியாவின் செல்லப் பிள்ளையாக அயல்நாட்டின் நட்புறவைப் பேணிப் பாதுகாப்பதில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்."-என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் நடைமுறையில் உள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டாலும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு சட்டம் இருப்பதையே காணமுடிகிறது.

அரசாங்க ஊழியர்களுக்கு அரசாங்கம் 5,000 ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ள நிலையில் மலையக மக்களுக்கு அது கிடைக்கவில்லை. தெற்கில் ஒரு சட்டம் மலையகத்தில் ஒரு சட்டம் என செயற்படுத்தப்படுகிறது.

மத ரீதியில் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் சில சக்திகளால் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன . கத்தோலிக்க தேவாலயங்களில் குண்டுகளை வைப்பதும் அக்கரப்பத்தனை பகுதியில் மூன்று தேவாலயங்கள் உடைக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட முடியும். அது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையில் நாட்டின் தற்போதைய பிரச்னைகளுக்கு எத்தகைய தீர்வும் முன்வைக்கப்படவில்லை.



பால்மாவுக்கு தட்டுப்பாடு எரிவாயு தட்டுப்பாடு என்ற நிலை தொடரும்போது மக்கள் தொழிலுக்குச் செல்வதா வரிசையில் நின்று அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதா என்ற நிலை நாட்டில் உருவாகியுள்ளது. இரண்டு, மூன்று தினங்களுக்கே எரிபொருள் கையிருப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.அதன் பின் அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?-என்றார். (அ)



## வவுனியா மதுபானச்சாலையில் நேற்று அதிகாலையில் தீ பரவல்!

*கட்டுப்படுத்த 4 மணிநேரப் போராட்டம்*

வவுனியா, ஜன. 21

வவுனியா வைரவப்புளியங்குளம் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள மதுபானச்சாலையில் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் திடீரென இடம்பெற்ற தீப்பரவல் சுமார் 4 மணி நேர போராட்டத்தின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவத்தின்போது விரைந்து செயற்பட்ட அயலவர்கள் நகரசபை தீயணைப்புப் பிரிவினர் மற்றும் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த நகரசபை தீயணைப்புப் பிரிவினர் பொலிஸாரின் தண்ணீர் பவுசர் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சித்தபோதிலும், மதுபானச்சாலை கட்டடத்தின் மேற்பகுதியில் தீ வேகமாக பரவியது.

இதனையடுத்து, 4 மணி நேரப் போராட்டத்துக்கு பின்னர் காலை 7.00 மணியளவில் தீ முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த தீவிபத்து சம்பவத்தால் குறித்த மதுபானச்சாலையின் கட்டடம் முழுமையாக சேதமடைந்திருந்ததுடன் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள், மதுபானப் போத்தல்கள் என்பன தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# புதிய அரசமைப்பை உருவாக்க தெரிவுக்குழு அமைக்கவேண்டும்

*அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை*

கொழும்பு, ஜன. 21

**"ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிரான வழக்குகளுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளே, புதிய அரசமைப்பை தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர். எந்தவொரு அரசும் அரசமைப்பு விடயத்தில் இவ்வாறு செயற்பட்டது கிடையாது. எனவே, புதிய அரசமைப்பை இயற்றுவதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுங்கள்."**

- இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற சபைஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கட்சியின் சார்பில் இந்த கோரிக்கையை எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அரசமைப்பை இயற்றும் நடவடிக்கை பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகவே இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது உங்களுக்கும் (சபாநாயகருக்கும்) தெரியும். ஆனால் இன்று என்ன நடக்கின்றது? ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரான வழக்குகளுக்காக வாதாடும் சட்டத்தரணிகள், புதிய அரசமைப்பை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். 20ஆவது திருத்தச் சட்டமும் இவ்வாறுதான் நிறைவேற்றப்பட்டது. இறுதி வரை எமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

புதிய அரசமைப்பு குறித்து ஜனாதிபதி உரையாற்றினார். புதிய அரசமைப்பை வெளியில் தயாரித்து பாராளுமன்றத்துக்கு அனுப்பாமல், அந்த பணியை முன்னெடுப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்க நடவடிக்கை எடுங்கள்.

அதேவேளை, 1948 இல் இருந்து இந்நாட்டை அரசுகள் ஆட்சி செய்துள்ளனர். இம்முறைதான் நாடு வங்குரோத்து அடைந்துள்ளது. -என்றார். (அ)

# '13' ஐ பாதுகாக்க இந்திய ஆதரவை கேட்கவேண்டிய நிலை ஏன் வந்தது?

*பாராளுமன்றத்தில் சித்தார்த்தன் விளக்கம்*

கொழும்பு, ஜன. 21

"13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாது செய்ய பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால்தான் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை பாதுகாக்க இந்தியாவின் ஆதரவை கேட்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஏனெனில் சமஷ்டி தீர்வு கிடைக்கும் வரையில் 13 ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்க வேண்டும்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான முதல் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே சித்தார்த்தன் எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்-

ஜனாதிபதி தனது கொள்கை பிரகடன உரையில் தமிழ் தேசிய பிரச்சினை தொடர்பாக எதனையும் கூறவில்லை. அத்துடன் வடக்கு கிழக்கு பிரதிநிதிகள் தமது கொள்கைகளை ஓரமாக வைத்துவிட்டு தமது செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுள்ளார். எமது கொள்கைகள் என்பது எமது மக்களின் அபிலாஷைகளாகும். இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் எமது மக்கள் தமிழ் கட்சிகளுக்கு



ஒரு ஆணையை வழங்கி வந்துள்ளனர். தமிழ் தேசிய இனப்பிரச்னைக்கு நியாய மான தீர்வு, அதுவும் சமஷ்டி முறைமையில் அந்த தீர்வு அமைய வேண்டும் என மிகத் தெளிவாக கூறிவந்துள்ளனர். அதனை யாரும் ஓரங்கட்ட முடியாது.

வடக்கு-கிழக்குக்கு அபிவிருத்தி தேவை , நிலைபேறான அபிவிருத்தியின் மூலமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். ஆனால் நியாமான தீர்வு இல்லாத காரணத்தினால் தான் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது போயுள்ளது. ஆகவே தமிழர் பிரச்னைக்கு நியாய மான தீர்வு காணப்பட்டால் தான் நாட்டில் நியாயமான அபிவிருத்தியையும் காண முடியும்.

பண்டா -செல்வா ஒப்பந்தம் தொடக்கம் இந்த நாட்டில் பல போராட்டங்களுக்கு நாம் முகங்கொடுத்துள்ளோம். அதில் பல்லாயிரக்கணக்கான மக்களை இழந்துள்ளோம். ஆகவே எமது கொள்கையை காப்பாற்ற இவ்வளவு தியாகங்களை செய்துவிட்டு இன்று அதனை ஓரங்கட்டுவது நடக்க முடியாத காரியம்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததே தவிர சமாதானம் ஏற்படவில்லை. யுத்த முடிவு என்பது சமாதானம் அல்ல. யுத்தம் ஏற்பட காரணமான காரணிகள் இன்றும் அப்படியேதான் உள்ளன. ஆகவே அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். வெறுமனே அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செய்வதன் மூலமாக மக்களுக்கு அது தீர்வாக அமையப் போவதில்லை. ஆகவே தான் எமது பகுதிகளில் எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய சமஷ்டி முறையான தீர்வுதான் சகல பிரச்னைகளுக்கும் தீர்வாக அமையும்.

இந்த நாட்டில் உள்ள அரசமைப்பில் உள்ள ஒரு சரத்தை அமுல்படுத்துவதற்கு ஒரு அரசு தயங்குவதை இந்த இலங்கையில் மட்டும் தான் காண முடியும். இப்போதுள்ள மாகாண சபையில் அதிகார பகிர்வு இல்லை. 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை இல்லாது செய்ய பலசூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆகவே தான் அதனை பாதுகாக்க இந்தியாவின் ஆதரவை கேட்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் எமது பிரச்னைகளுக்கு இறுதித் தீர்வு அல்ல, ஆனால் சமஷ்டி தீர்வு கிடைக்கும் வரையில் 13 ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்க வேண்டும் என இந்தியாவை வலியுறுத்தியுள்ளோம். 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்தியாவிற்கும் கடமை உள்ளது. இது இந்த நாட்டுக்கு எதிரான செயல்பாடு அல்ல-என்றார்.

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக ஜெயராணி பரமோதயன் பதவியேற்பு

முல்லைத்தீவு, ஜன. 21

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக திருமதி. ஜெயராணி பரமோதயன் கடமைகளைப் பொறுபோற்றுக்கொண்டார்.

இதுவரை காலமும் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக கடமையாற்றிய த.அகிலன் நேற்றுமுன்தினம் முதல் கிளிநொச்சி மாவட்டத்துக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளராக கடமையாகிய திருமதி. ஜெயராணி பரமோதயன் நேற்று முன்தினம் முதல் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளராக தனது கடமைகளைப் பொறுபோற்றுக்கொண்டார். (அ)

## ஜனாதிபதியின் உரையால் நாட்டு மக்கள் அச்சத்தில்!

*கூறுகிறார் கஜந்த கருணாதிலக*

கொழும்பு, ஜன. 21

அரசாங்கத்தின் பசுமைக் கொள்கை முன்னோக்கிக் கொண்டு செல்லப்படும் என ஜனாதிபதி அண்மையில் வெளியிட்ட அறிக்கையால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

பாராளுமன்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கருணாதிலக,

ஜனாதிபதி தனது உரையின் போது தனது பசுமைக் கொள்கையானது மக்களுக்கு சரியாக தெரிவிக்கப்படாததால் அது நடைமுறைக்கு வரவில்லை என்று கூறினார்.

எவ்வாறாயினும், உர மானியத்தை குறைப்பதற்காகவே பசுமைக் கொள்கை என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது என்பதை கிராமிய மக்கள் அறிவார்கள்.

பல ஆண்டுகளாக நாட்டுக்காக சேவையாற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை, இந்தியா மற்றும் சீனாவின் ஆதரவைப் பெற வேண்டும் என்ற அரசின் கொள்கை அழித்து வருகிறது என்பது தெளிவாகிறது.

தற்போது பொதுமக்களுக்கு மூன்று வேளை உணவு வாங்க முடியாத நிலைமையேற்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம், நீதித்துறை மற்றும் பொலிஸாருக்கு சுதந்திரமாக செயற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சேவையின் வினைத்திறனை அரசாங்கம் மேம்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றபோதிலும், காஸ் கசிவுகளுக்கு காரணமானவர்களோ அல்லது தரமற்ற உரத்தை இறக்கிய நபர்களோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை-என்றார்.



# கிளிநொச்சியில் மணல் கொள்ளை நடக்குமிடத்தில் ராணுவ காவலரண்

கிளிநொச்சி, ஜன. 21

இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள ஆற்றுப்படுகையில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களை நேற்று முன்தினம் அதிகாரிகள் பார்வையிட்டனர்.

கிளிநொச்சியில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலாளர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடக்கும் இடத்துக்கு கள விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறும் இடத்தில் இராணுவ காவலரண் அமைப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்த வருடத்தில் மட்டும் 5,000 டெங்கு நோயாளர்!

கொழும்பு, ஜன. 21

இந்த வருடத்தில் இதுவரை 5,000 டெங்கு நோயாளர்கள் நாட்டில் பதிவாகியுள்ளனர்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் வைத்தியர் இந்திக்க வீரசிங்க கருத்து தெரிவிக்கையில்-

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்திலிருந்து டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. டிசெம்பர் மாதத்தில் இதன் உச்சநிலை பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் 9,000 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். இந்த வருடம் ஜனவரி மாதத்தில் 5,106 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. அது ஒரு தொற்று நோயாக மாறி வருகிறது.

நாட்டில் பதிவாகும் டெங்கு நோயாளர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகுவதால், அங்குள்ள நிலைமை மிகவும் முக்கியமானது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துள்ளது.

காலி, பதுளை, யாழ்ப்பாணம், குருநாகல், கண்டி, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாநகர சபைப் பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகளிலும் இதே நிலைமையை அவதானிக்க முடிகின்றது-என்றார். (அ)

# 3 பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது நாடு

## வர்த்தக அமைச்சர் கூறுகிறார்



**கொழும்பு, ஜன. 21**

**இலங்கை தற்போது மூன்று பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

டொலர் நெருக்கடி, நிதி நெருக்கடி மற்றும் வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது ஆகியவை அவற்றுள் அடங்கும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக் கையில்-

நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பரந்த விவாதம் மற்றும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஜனாதிபதி இந்த கொள்கை விளக்கத்தை வழங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பொறுப்பு மற்றும் தற்போதை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு உறுப்பினர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை ஜனாதிபதி விரிவாக விளக்கினார்-என்றார். (அ)

# மெழுகுவர்த்தி தட்டுப்பாடு!

கொழும்பு, ஜன. 21

எரிபொருள் சிக்கல் தொடரும் நிலையில் நீடித்து வரும் மின் துண்டிப்பு காரணமாக நாட்டில் மெழுகுவர்த்திக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள் அதிகளவில் மெழுகுவர்த்தியை கொள்வனவு செய்கின்றமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், மெழுகுவர்த்தி ஒன்றின் விலையை 15 ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

மெழுகுவர்த்தி உற்பத்திக்கான உப பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# தீ மிதிப்பில் பங்கேற்ற இளம் தாய் உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 21

கொழும்பு ஆமர் வீதியிலுள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற வருடாந்த தீ மிதிப்பு உற்வசத்தில் கலந்துகொண்ட இளம் தாயொருவர், தீயால் ஏற்பட்ட காயங்களால் உயிரிழந்துள்ளார்.

கெசல்வத்தை பகுதியைச் சேர்ந்த 26 வயதான அக்குருவிட்ட ஆராச்சிகே இரேஷா மதுரங்கனி என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆமர் வீதியிலுள்ள குறித்த ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு நிகழ்வு கடந்த 14ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் தீ மிதிப்பு நிகழ்வில் கலந்து கொண்டபோது கால்களில் தீக்காயம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீக்காயங்களுக்கு சிகிச்சை பெறாமல் வீட்டில் இருந்த பெண், கவலைக்குரிய நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர் சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# ஓய்வு பெறும் வயதை அதிகரிக்கும் வர்த்தமானி அறிவிப்பு வெளியானது

கொழும்பு, ஜன. 21

அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக அதிகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ளது.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் பிரகாரம் அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதை 65 ஆக நீடிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 65 ஆக மாற்றியமைத்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# யாழ்.சர்வதேச வர்த்தக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் மாநகர சபைக்கு 20 இலட்சம் ரூபா செலுத்தவேண்டும்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணத்தில் வருடாந்தம் நடைபெறும் சர்வதேச வர்த்தக கண்காட்சியின்போது , யாழ்.மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய நிதியில் 20 இலட்சம் ரூபாவை ஏற்பாட்டாளர்கள் இதுவரை மாநகர சபைக்கு வழங்கவில்லை என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர சபை மண்டபத்தில் மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சர்வதேச வர்த்தக கண்காட்சி தொடர்பிலும் விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக இறுதியாக நடைபெற்ற குறித்த கண்காட்சிக்காக மாநகரசபைக்கு செலுத்தவேண்டிய நிதியான 30 இலட்சம் ரூபா இதுவரை செலுத்தப்படாதிருந்ததாகவும் அதில் 10 இலட்சம் ரூபா தற்போது குறித்த தரப்பினரால் செலுத்தப்பட்டுள்ளதாகவும். மிகுதிப் பணம் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

அத்தோடு இம்முறை வர்த்தகக் கண்காட்சியில் காட்சி அறை ஒன்றின் அறவீடு குறைப்பு தொடர்பில் மாநகரசபை இறுக்கமாக இருக்க வேண்டும். அத்துடன் நுழைவுச் சீட்டு உள்ளிட்ட விடயங்களில் மோசடி இடம்பெறாத வகையில் கண்காணிப்பு இறுக்கமாக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அவ்வாறு மோசடிகள் காணப்பட்டால் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 3 இலட்சம் ரூபா தண்டம் அறவிடப்படவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(அ)

# எண்ணெய்க்குதங்கள் குறித்து எதிர்க்கட்சி பொய்ப் பிரசாரம்

## கூறுகிறார் எரிசக்தி அமைச்சர்

கொழும்பு, ஜன. 21

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டமை குறித்து எதிர்க்கட்சிகள் உண்மைக்கு புறம்பான விடயங்களை தெரிவித்து வருவதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.



தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்துவதற்காக எதிர்க்கட்சிகளுடன் விவாதம் செய்யவும் தான் தயார் எனவும் குறிப்பிட்டார்.(அ)



# தன்னிறைவு பொருளாதரத்தை நோக்கி இலங்கை செல்ல சீனா உதவுகின்றதா?

**இலங்கையின் ஏற்றுமதி வருமான வழிகளைக் கூட இலங்கைக்கு வெளியேயுள்ள சக்திகளே தீர்மானிக்கும் நிலை நிலவுகிறது. அதாவது எமது ஏற்றுமதி கூட சுய சார்புப் பொருளாதாரம் என்ற எல்லைக்குள் இல்லை. அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளை நோக்கித் தங்கள் பொருளாதாரக் கரங்களை விரிக்கின்றன.**

**நா.யோகேந்திரநாதன்**

அண்மையில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் - யீ - இலங்கை சீன உறவு 85 ஆண்டுகளை எட்டியதையிட்டு இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் மேற்குலக, இந்திய ஊடகங்களால் மிகவும் அதிகமாகப் பேசப்பட்டதுடன் பல்வேறு விதமான சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருந்தது.

சீன அரசினதோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினுடையதோ பிரதானிகள் இலங்கை வந்து செல்வது அப்படியொன்றும் ஆச்சரியமளிக்கும் விடயமல்ல. எனினும் வாங் - யீயின் விஜயத்தின் மீது அனைவரின் கரிசனையும் உயர்ந்திருந்தமைக்கு இரு காரணங்கள் இருந்தன.

ஒன்று யுகதெனிய ஒப்பந்தம் மூலம் அமெரிக்க நிறுவமொன்றுக்கு கெரவலப்பிட்டிய மின் நிலயத்தின் 49 வீத பங்குகள் விற்கப்பட்டமையுடன் இலங்கைக்கான எரிவாயு விநியோக உரிமை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கியமை, அடுத்தது திருகோணமலையிலுள்ள 14 எண்ணெய்த் தாங்கிகள் இந்தியாவுக்கு 50 ஆண்டு கால குத்தகைக்கு வழங்கப்பட்டமையுடன், 51 வீதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் 49 வீதம் ஐ.ஓ.சி. நிறுவனத்துக்கும் பங்குரிமை கொண்ட லங்கா பெற்றோலியம் ரேமினல் என்ற தனியார் நிறுவனத்துக்கும் 51 தாங்கிகளையும் வழங்கியமையாகும்.

இவ்வாறு இலங்கை அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளுடன் பெருமளவிலான பொருளாதார நகர்வை மேற்கொண்டுள்ள நிலையில் தான் சீன அமைச்சரின் விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் வாங் யீ அவர்கள் இவ்விடயங்கள் தொடர்பாக எவ்வித கருத்தையும் வெளியிடாது இலங்கைக்கும் சீனாவுக்குமிடையேயான வரலாற்றுக் கால உறவு தொட்டு இன்றைய பிணைப்பு வரைக் கூறியதுடன் இலங்கை தன்னிறைவுப் பொருளாதாரத்தில் முன்செல்ல சீனா எல்லாவித உதவிகளையும் வழங்குமென வாக்குறுதியளித்திருந்தார். இவருடைய உரைக்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய உரையும் சீன உதவிகளுக்கு நன்றி தெரிவித்ததுடன், சீன இலங்கை உறவின் இறுக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது.

இரு நாட்டுத் தலைவர்கள் சந்திக்கும் போது இப்படியான உரைகள் எதிர்கால உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் அமைவது இயல்பான ஒரு வழமையாக நிலவி வருகிறது. எனினும் வான் - யீ அவர்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தின் பின்னால் சொல்லாமலே சீன சில முக்கிய விடயங்களை அறிவுறுத்தியுள்ளதை உற்றுக் கவனித்தால் புரிந்து கொள்ள முடியும்.

அதாவது இலங்கை தன்னிறைவுப் பொருளாதரத்தை நோக்கி முன் செல்ல சீனா எல்லா உதவியையும் செய்யும் என்பது தான்.

ஆனால் 1977ஆம் ஆண்டின் பின்பு இலங்கை தன்னிறைவுப் பொருளாதாரத்திலிருந்தும் அதை நோக்கி வளர்ச்சியடையும் பாதையிலிருந்தும் வெகுதூரம் விலகி விட்டதென்ற உண்மை கவனிக்கப்படவேண்டும். குறிப்பாக உணவு உற்பத்தி விடயங்களில் கூட வேகமாக ஏற்பட்டு வந்த வளர்ச்சிப் போக்குக் கூட மழுங்கடிக்கப்பட்டுக் குழப்ப நிலைக்குத் தள்ளப்பட்டுக் கப்பல்களை எதிர்பார்க்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

ஆனால், தற்கால இலங்கைப் பொருளாதாரம் ஏற்றுமதி, இறக்குமதி என்ற அடிப்படையில் அமைந்திருந்தாலும் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் சமநிலை பேணப்பட முடியாத நிலையில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையே நிலவுகிறது. அதேபோன்று வருமானத்தை எதிர்பார்க்கும் சுற்றுலாத்துறை கூட இலங்கைக்கு வெளியேயுள்ள சக்திகளால் தீர்மானிக்கப்படும் விடயமாகவே உள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் தைக்கப்பட்ட ஆடைகள், மீன் ஏற்றுமதி, சுற்றுலாத்துறை என்பன முக்கியமானவையாக விளங்குகின்றன. ஒரு காலத்தில் பிரதான ஏற்றுமதி தேயிலையாக இருந்தபோதிலும் தரத்தைத் தொடர்ந்து பேணத் தவறியமையால் இந்தியா, மலேசியா போன்ற நாட்டு தேயிலைகளால் பின்தள்ளப்படவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

ஆடைத் தொழிலைப் பொறுத்தவரை ஆடை உற்பத்திக்கான மூலப் பொருட்கள் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இயந்திரங்களும் இறக்குமதி செய்யப்படுபவையே. அது மட்டுமின்றி மேற்படி உற்பத்தி நிறுவனங்கள் கூட வெளிநாட்டவர்களுக்குரியதாகவோ அல்லது இலங்கையர்களுடனான கூட்டு நிறுவனங்களாகவே அமைந்திருக்கும். அதேவேளையில் அவற்றின் ஏற்றுமதியைத் தீர்மானிப்பது கூட மேற்குலக நாடுகளே என்பதை மறந்து விடமுடியாது. ஆடை ஏற்றுமதி வருமானத்தில் 41 வீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் அதில் 31 வீதம் அமெரிக்காவுக்குமே அனுப்பப்படுகின்றன. ஆனால் அரசியல் காரணங்களின் அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யும் ஆடைகளுக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலு கையை நிறுத்தவோ விடுக்கவோ முடியும். இதேபோன்று மனித உரிமை விவகாரங்கள் அடிப்படையில் ஐரோப்பிய நாடுகள் மீன் இறக்குமதியை நிறுத்தியது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று சுற்றுலாத்த்துறையில் கூட நிச்சயமற்ற நிலையே நிலவுகிறது.

எனவே இலங்கையின் ஏற்றுமதி வருமான வழிகளைக் கூட இலங்கைக்கு வெளியேயுள்ள சக்திகளே தீர்மானிக்கும் நிலை நிலவுகிறது. அதாவது எமது ஏற்றுமதி கூட சுய சார்புப் பொருளாதாரம் என்ற எல்லைக்குள் இல்லை. அமெரிக்கா உட்பட்ட மேற்குலக நாடுகள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளை நோக்கித் தங்கள் பொருளாதாரக் கரங்களை விரிக்கின்றன. ஏனென்றால் அது அந்தந்த நாடுகளின் மூல வளங்களையும் மனித உழைப்பையும் குறைந்த கூலியில் பெற்றுக்கொண்டு கொள்ளை இலாபம் சம்பாதிப்பதே என்பது உலகறிந்த உண்மை. எனவே அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கையுடன் கொண்டுள்ள மேலாதிக்கப் பொருளாதார உறவில் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

இப்படியான நிலையில் சுயசார்புப் பொருளாதாரத்தை நோக்கி முன் செல்ல சீனா உதவி செய்யுமென வான் - யீ வாக்களித்துள்ளார். அப்படியானால் அந்த விடயத்தில் சீனா இதுவரை என்ன செய்தது என்ற கேள்வி எழுகிறது. ஒரு காலத்தில் அமெரிக்கா இலங்கை மீது பொருளாதார நெருக்கடிகளைக் கொடுத்த போது, சீன இறப்பர் - அரிசி ஒப்பந்தம், தெங்குப் பொருட்கள் இறக்குமதி- என்பன மூலம் இலங்கையின் தற்சார்புப் பொருளாதாரத்துக்கு உதவி செய்தது உண்மைதான். ஆனால் ராஜபக்ஷ் குழுமத்தினரின் ஆட்சிக் காலங்களில் தன்னிறைவுப் பொருளாதாரத்துக்கு சீனா என்ன செய்தது என்பது தான் கேள்வி.

இலங்கைக்கு சீனா பல பிரமாண்டமான திட்டங்களை வழங்கியிருந்தது. அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம், தெற்கு அதிவேக நெடுஞ்சாலை என இவை மூன்றும் தென்மாகாணத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டன. அம்பாந்தோட்டைத் துறைமுகம் கொள்கலன் மாற்று வசதிகளைக் கொண்டமைந்ததால் அதன் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணி வருமானத்தைப் பெறமுடியுமென நம்பப்பட்டது. இவ்வாறே ஜாலவனப் பூங்காவைப் பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகளாலும் ஏனைய அமைக்கப்படவுள்ள வர்த்தக கேந்திர மையத்தாலும் மத்தள விமான நிலையமும் அதிவேக நெடுஞ்சாலையும் கணிசமான அந்நியச் செலவாணியை ஈட்ட முடியுமென எதிர்பார்க்கப்பட்டது.

அதேபோன்று துறைமுக நகரம் நிர்மாணிக்கப்பட்டது. அதில் பெருமளவு அந்நிய முதலீடுகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இலங்கை ஆட்சியாளர்கள் எவ்வளவு முயன்றபோதும் எதுவும் வெற்றிகரமாக அமைவதாகத் தெரியவில்லை.

ஆனால், இவை மூலம் சீனாவின் ஒரே பாதை -ஒரே மண்டலம் திட்டத்துக்கு நல்ல மையம் கிடைத்துள்ளது என்பது மட்டுமே உண்மை.

அடிப்படையில் சீனாவால் வழங்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், மாத்தளன் விமான நிலையம், தெற்கு நெடுஞ்சாலை உட்பட சீன உதவியில் வழங்கப்படும் திட்டங்கள் மேற்கு நாடுகளைக் கவர்ந்திழுப்பதன் மூலம் அந்நியச் செலாவணி ஈட்டுவதில் வெற்றி பெறமுடியும்.

எனவே சீன உதவிகள் கூட சுய ஆதாரப் பொருளாதாரத்தை நோக்கி முன்னேறக் கதவைத் திறக்கவில்லை. மாறாக உலக மயமாக்கலின் மேலாதிக்க சக்திகளில் ஏனைய வறிய நாடுகள் தங்கி நிற்கும் ஒரு தங்கு நிலைப் பொருளாதாரத்தை நோக்கி உந்தித் தள்ளியுள்ளன என்பதே உண்மை.

இன்னும் சொல்லப் போனால் மேற்குலக வல்லரசுகளுக்கும் சீனாவுக்குமிடையே நிலவும் பனிப்போரில் இலங்கை போன்ற நாடுகள் பலிக் கடாவாகி மேலும் மேலும் வறுமையில் தள்ளப்படும் சாத்தியப்பாடுகளே உண்டு.

இலங்கை சீனா பக்கம் சாய்வதாகப் போக்குக் காட்டி மேற்குலகைப் பயன்படுத்துவதும் மேற்குலகம், இந்தியா ஆகியவை பக்கம் சாயப் போவதாகக் காட்டி சீனாவிடம் உதவிகளைப் பெறுவதும் என்ற தோற்றப்பாட்டை உருவாக்கும் தந்திரோபாயம் காலாவதியாகிவிட்டது. எனவேதான் இந்தியாவிடமும், மேற்குலகிடமும் நிபந்தனையற்ற விதத்தில் காலில் விழவேண்டிய நிலை திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

சீனாவுக்குமான இலங்கைக்குமான உறவு 85 ஆண்டு கால வரலாற்றைக் கொண்டிருந்தாலும் 1977இற்கு முன்பு அந்த உறவு 3ஆம் உலக நாடொன்றை கைதூக்கி விடுமளவுக்கு அமைந்திருந்தது என்பதும் அண்மைக் கால உறவு சீனாவின் உலகளாவிய மேலாதிக்க நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுமளவுக்கு மட்டுமே வகுக்கப்படுகிறது என்பதும் கவனத்திலெடுக்கப்படவேண்டிய முக்கிய விடயமாகும்.

**- நன்றி:அருவி**

# தீர்வு காணப்பட வேண்டிய மலையக மக்களின் பிரச்னைகள்



இலங்கையில் ஆட்சிக் கட்டிலில் வீற்றிருக்கும் ராஜபக்ஷ சகோதரர்கள் எடுத்த மிகவும் பாராட்டத்தக்க நடவடிக்கை, ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களிலும் ஆடைத்தொழிற்சாலைகளிலும் தேயிலைத் தோட்டங்களிலும் வேலை செய்யும் மக்கள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் போன்ற சமூகத்தின் மிகவும் சுரண்டப்படும் பிரிவினரின் வாழ்க்கை நிலைமைகளை ஆராய்வதற்காக அடிமைத்தளையின் நவீன வடிவங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தமையாகும். இச் சிறப்பான முன்னெடுப்பினைத் தெற்காசியாவில் எடுத்த முதலாவது நாடு இலங்கையாகும். பிராந்தியத்தில் ஏனைய நாடுகள் இலங்கை உதாரணத்தினைப் பிரதிசெய்ய முடியுமா?

பிரச்னைகளை ஸ்தலத்தில் கண்டறிவதற்காக ஐ.நா. விசேட தூதுவரான டொமொயா ஒபொகடா நவம்பர் 26 இற்கும் டிசம்பர் 3 இற்கும் இடையில் இலங்கைக்கு விஜயம் செய்தார். விஜயம் செய்த தூதுவர் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் விடயத்தில் சம்பந்தப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்தார். தான் கண்டறிந்த விடயங்களின் பூர்வாங்க அறிக்கையினைத் தூதுவர் நவம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சமர்ப்பித்தார். இறுதி அறிக்கையானது 2022 செப்டெம்பரில் ஐநாவில் சமர்ப்பிக்கப்படும்.

தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களாவர். தனிநபர் வருமானம், வாழ்க்கை நிலைமைகள், நீண்ட ஆயுள், கல்வி அடைவுகள் மற்றும் பெண்களின் நிலை - இவற்றைக் கணிப்பிட எந்த அளவுகோலையும் பிரயோகியுங்கள் - அவர்கள் ஏணியின் அடியிலேயே இருக்கின்றனர். ஐ.நா. விசேட தூதுவர் பின்வருமாறு கோடிட்டுக்காட்டியுள்ளார்: “நவீன அடிமை முறைகள் இனத்துவப் பரிமாணங்களைக் கொண்டுள்ளன. குறிப்பாக, 200 வருடங்களுக்கு முன்னர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்கள் அவர்களின் வம்சாவளி யின் அடிப்படையில் பல்வேறு வடிவிலான பாகுபாடுகளுக்கு இன்னும் முகங்கொடுத்து வருகின்றனர்.”

2017ஆம் ஆண்டில், இலங்கை தேயிலைத் தொழிற்துறையின் 150ஆவது வருடப் பூர்த்தியினைக் கொண்டாடியது. பொருளாதாரத்தில் தேயிலைத் தொழிற்துறையின் வகிபாத்திரத் தினைக் கோடிட்டுக்காட்டுவதற் கும், துறையின் உற்பத்தியினை எவ்வாறு உயர்த்துவது என்பது பற்றியும், துறையினை எவ்வாறு நவீனமயப்படுத்துவது என்பது பற்றியும் அரசாங்கமும் தோட்ட உரிமையாளர்களும் பல கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், கண்டியிலுள்ள சமூக அபிவிருத்தி நிறுவனம் மட்டுமே, உலகம் முழுவதிலும் பல லட்சக்கணக்கானவர்களுக்கு அதிகாலைக் களிப்பினை வழங்கும் இரண்டு இலைகளையும் ஒரு கொழுந்தினையும் (கலாநிதி முல்க் ராஜ் ஆனந்தினால் எழுதப்பட்ட நாவல்) உற்பத்திசெய்பவர்கள் பற்றிய ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருந்தது. தோட்ட உரிமையாளர்களினதும் தொழிலாளர்களினதும் மாறுபடும் வாழ்க்கைகள் கட்டாயம் கோடிட்டுக்காட்டப்பட வேண்டும். கீழேயுள்ள இரண்டு மேற்கோள்கள் மாறுபாட்டினை விபரிக்கின்றன.

பிரித்தானியர்கள் எவ்வாறு அடிமை முறையினை மீளக் கண்டுபிடித்தனர் என்ற தலைப்பில் ஒரு ஆவணத்தொகுப்பினை பிபிசி 2005ஆம் ஆண்டு ஒலிபரப்பியது. தோட்ட உரிமையாளரின் வாழ்வினை ஆவணத்தொகுப்பு பின்வருமாறு சித்தரிக்கின்றது: “நீங்கள் உங்கள் வராந்தாவில் அமர்ந்திருக்க, வேலைக்காரன் விசிறிவீச, லெமனெடைப் பருகிக்கொண்டிருக்க, உங்கள் கால் நகங்களை யாரோ ஒரு கூலி நறுக்கிக்கொண்டிருக்க, நீங்கள் தொழிலாளர்கள் வேலை செய்வதைப் பார்க்கலாம், நீங்கள் விரும்பிய எந்தப் பெண்ணுடனும் உல்லாசமாக இருக்கலாம், காலையில் எழுந்தது முதல் படுக்கைக்குச் செல்லும் வரை ஏறக்குறைய அனைத்துமே உங்களுக்காகச் செய்யப்படுகின்றன. மக்கள் உங்களைக் கவனித்துக்கொண்டனர், மக்கள் உங்களுக்கு அடிபணிந்தனர், மக்கள் உங்களுக்குப் பயப்படுகின்றனர், தோட்ட உரிமையாளர் என்ற ரீதியில் உங்களின் ஒற்றை வார்த்தை வாழ்வையே மறுக்கலாம்.”

மலையகத் தமிழ் மக்களின் மிக முக்கியமான அம்சம் அவர்களின் சனத்தொகையில் ஏற்பட்டுள்ள கணிசமான வீழ்ச்சியாகும். 1948 இல் சுதந்திரம் கிடைத்தபோது, அவர்கள் இலங்கைத் தமிழர்களை விட எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருந்தனர். கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையில் 1964ஆம் ஆண்டும் 1974ஆம் ஆண்டும் கைச்சாத்திடப்பட்ட இரண்டு ஒப்பந்தங்களின் காரணமாகப் பெரும் எண்ணிக்கையில் இந்தியப் பிரசைகள் என்ற ரீதியில் இம்மக்கள் இந்தியாவுக்கு மீண்டும் அனுப்பப்பட்ட காரணத்தினால், இவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தது. இன்று, தொகைமதிப்புப் புள்ளிவிபரத்தின் படி, இவர்கள் சனத்தொகையில் வெறும் 5.5% ஆகவே இருக்கின்றனர்.

சுதந்திரத்தின் பின்னரான முதல் சில தசாப்தங்களில் இந்தியத் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பாரிய பிரச்னை நாடற்ற நிலை எனும் பிரச்னையாகும். நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் என நடாத்தப்பட்ட சாதுர்யமிக்க கலப்புப் போராட்டங்களுடன், சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமையின் கீழ் இந்தச் சமுதாயம் பிடிவாதமிக்க சிங்கள ஆதிக்க அரசாங்கத்திடம் இருந்து பிரசாவுரிமைக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

1964 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் இலங்கையில் பிறந்த அனைவருக்கும் பிரசாவுரிமை வழங்கப்பட்டது. இது சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படுவதற்கென எஞ்சியிருந்தவர்களையும் உள்ளடக்கியது. 1978ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார முறைமையினால் இச்சமுதாயம் அதிக பிரதிநிதிகளைப் நாடாளுமன்றத்திற்கு அனுப்பக்கூடியதாக இருந்தது.

இப்போது இந்தச் சமுதாயம் சமத்துவத்திற்கும் கௌரவத்திற்காகவும் போராடி வருகின்றது. வாழ்க்கை நிலைமைகள் முன்னேறியிருந்தாலும், செம்மையான சமத்துவம் எனும் அந்தஸ்தினை இம் மக்கள் அனுபவிப்பதற்கு இன்னும் அதிக விடயங்கள் செய்யப்படவேண்டியுள்ளன. மிகவும் முக்கியமான முதல் விடயமாக, மனித உரிமைகள் மீறல்கள் தொடர்ந்து இடம்பெறுவது குறிப்பிடப்படவேண்டும். மலையகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் ஒருபோதும் தனிநாடொன்றுக்கான கோரிக்கையினை முன்வைக்கவில்லை என்ற போதிலும், 1977, 1981 மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் இந்தச் சமுதாயத்தினர் சிங்களக் காடையர்களின் வெறித்தனமும் மிருகத்தனமும் கொண்ட தாக்குதலுக்கு உட்பட்டனர்.

2006ஆம் ஆண்டு நடைபெற்ற பிந்துனுவெவ படுகொலையின் பின்னர் நான் ஹட்டனில் இருக்க நேரிட்டது. இந்திரா எனும் ஓர் இளம் பெண் பாதுகாப்பின்மை காரணமாக தன்னால் ஹட்டன் நகரில் நடமாட முடியாதிருப்பதாக என்னிடம் நம்பிக் கூறினார். சென்னையில் பெரம்பூரில் இருக்கும் தனது சகோதரனுடன் தன்னை ஒப்பிட்டு அங்கே தன்னால் பின்னிரவுச் சினிமாக் காட்சிக்குக் கூடப் பயமின்றிச் செல்ல முடியும் எனக் கூறினார். இரண்டாவதாக, தேயிலைத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியம் 1000 ரூபாவாகும். இது இம்மக்களின் நாளாந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கே போதாது.

**பிரச்னைகளை ஸ்தலத்தில் கண்டறிவதற்காக ஐ.நா. விசேட தூதுவரான டொமொயா ஒபொகடா நவம்பர் 26 இற்கும் டிசம்பர் 3 இற்கும் இடையில் இலங்கைக்கு விஜயம் செய்தார். விஜயம் செய்த தூதுவர் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் அரசாங்க அதிகாரிகளையும் தொழிற்சங்கத் தலைவர்களையும் விடயத்தில் சம்பந்தப் பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையும் சந்தித்தார்.**

வி.சூர்யநாராயணன்

இதனால் பலரும் தோட்ட வேலைகளுக்குப் போகாமல் மரக்கறித் தோட்டங்களில் வேலை செய்யச் செல்கின்றனர். அங்கே இவர்களுக்கு காலையுணவும் மதிய உணவும் வழங்கி இதைவிட இரண்டு மடங்கு ஊதியம் வழங்கப்படுகின்றது. இறுதியாக, எல்லாச் சிறுவர் சிறுமிகளும் பாடசாலைக்குச் சென்றாலும் பலர் பாடசாலையில் இருந்து இடைவிலகுகின்றனர். மிகவும் சொற்பமானவர்களே பல்கலைக்கழக மட்டம் வரை கல்வி கற்கின்றனர். சர்வதேச உறவுகளுக்கான சார்க் பேராசிரியராக நான் 2006ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து பணியாற்றினேன். கலைமானி இறுதியாண்டு வகுப்பில், தமிழ் மொழி மூலத்தில், 10 மாணவர்கள் இருந்தனர். இந்தப் பத்து மாணவர்களில் எட்டுப் பேர் முஸ்லிம் மாணவிகள். இவர்களுடன் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு மாணவனும் பெருந்தோட்டப் பிரதேசத்தினைச் சேர்ந்த ஒரு மாணவியும் இருந்தனர். அதே வருடம், பல்கலைக்கழகத்தில் இருந்த இந்தியத் தமிழ்ச் சமுதாயத்தினைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 10 ஆகவே இருந்தது.

இலங்கை உயர் ஸ்தானிகரான மிலிந்த மொரகொட அவரின் மூன்று வருடங்களுக்கான செயற்திட்டத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் அதிகளவு கல்விப் பரிமாற்றங்கள் இருக்க வேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டியுள்ளார். உதாரணமாக, உலகளாவிய கற்கைகளுக்கான சென்னை நிலையம், தமிழ் மாணவர்கள், குறிப்பாக மலையக மாண வர்கள் இரண்டாம் நிலைக் கல்விக்காக வும் பல்கலைக்கழகக் கல்விக்காகவும் இந்தியாவுக்கு வருவதற்கு உதவி செய்து அவர்களின் அனைத்துச் செலவுகளையும் ஏற்றுக்கொள்வதற்கும் அவர்களுக்குப் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும் ஆர்வமாக இருக்கின்றது. ஒரு சமுதாயத்திடம் சிறந்த விழுமிய அடிப்படையிலான கல்வி இருக்கையில் மாத்திரமே அச்சமுதா யத் தினால் முன்னேற முடியும். இந்த விடயத்தில் தமிழ்நாட்டினால் ஒரு நன் மையளிக்கும் வகிபாத்திரத்தினை வகிக்க முடியும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் சந்திக்கும் சிறப்புரிமை கிட்டிய முனைவர் எம்.ஏ.நுஹ்மான் அவர்கள் எழுதிய கவிதையுடன் இதனை நான் நிறைவுசெய்ய விரும்புகின்றேன்: “எங்கே சமத்துவம் இல்லையோ, அங்கே சமாதானம் இல்லை, எங்கே சமாதானம் இல்லையோ, அங்கே சுதந்திரம் இல்லை, இவைதான் எனது இறுதி வார்த்தைகள், சமத்துவம், சமாதானம் மற்றும் சுதந்திரம்.” ■

- மாற்றம்

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

**மாதிரிப் பரீட்சை வினாத்தாள்**

கல்வி tv CHANNEL


❖ **1ஆம், 2ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள கூட்டத்தினுள் பொருந்தக் கூடிய உருவைத் தெரிவு செய்க.**

01.




1) 2) 3)

02.



1) 2) 3)

03. கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களினை நன்கு அவதானிக்கவும். 1ஆவது படத்திற்கும் 2ஆவது படத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் எத்தனை?




1) 2)

1) 4 2) 3 3) 1


❖ **4 ஆம், 5 ஆம் வினாக்களில் உருக்களின் கோலத்தை அவதானித்து அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.**

04.




1) 2) 3)

05.



1) 2) 3)

06. ஊடு கடத்தும் தாளில் வரையப்பட்ட இரு உருக்களை ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது தோன்றும் உரு எது?



1) 2) 3)

❖ **7ஆம், 8ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கவிதையை அடிப்படையாகக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.**

வானம்பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளியும் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது.

07. கூத்தை வாழ்த்திப் பாட்டுப் பாடுவது எது?

1) மயில் 2) வானம்பாடி 3) கிளி

08. பாடலில் வந்துள்ள பிராணிகள் எக்கூட்டத்தைச் சேர்ந்தவை?

1) மிருகங்கள் 2) பூச்சிகள் 3) பறவைகள்


09. தரப்பட்ட சொற்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய விடையைத் தெரிவு செய்க.

நிழல் - விழுதுகள் - சிறிய பழம்



1) 2) 3)

10.



தரப்பட்ட உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவில் எத்தனை மடங்காகும்?

1) $\frac{1}{2}$ மடங்கு 2) 2 மடங்கு 3) 6 மடங்கு

11. வாகனத் தரிப்பிடம் ஒன்றிலுள்ள மோட்டார் கார்களினதும் மோட்டார் சைக்கிள்களினதும் எண்ணிக்கை 58 ஆகும். அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 156 ஆகும் எனில், வாகனத் தரிப்பிடத்தில் உள்ள மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?

1) 20 2) 38 3) 40

12. ஜானுவிடம் உள்ள பணத்தைப் போன்று 3 மடங்கு பணம் பானுவிடம் உள்ளது. ஜானுவின் தங்கையிடம் ஜானுவிடம் உள்ள பணத்தைப் போன்று 4 மடங்கு பணம் உள்ளது. மூவரிடமும் உள்ள மொத்த பணம் ரூபாய் 320.00 எனின், பானுவிடம் உள்ள பணம் எவ்வளவு?

1) ரூபாய் 40.00 2) ரூபாய் 120.00 3) ரூபாய் 160.00

### விடைகள்

*01) 02 02) 3 03) 1 04) 3 05) 1 06) 3*
*07) 2 08) 3 09) 2 10) 1 11) 2 12) 2*

---

கல்வி tv CHANNEL-1

**14.01.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**14.01.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# புதிய தேசியப் பாடசாலைகளுக்கு கிழக்கு மாகாணத்தில் பெரும் அநீதி

## கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் கவலை

மட்டக்களப்பு, ஜன. 21

**பட்டதாரி பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் விடயத்தில், புதிதாக தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய பயிலுநர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கவலை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் செயலாளர் ஏ.எல். முஹம்மது முக்தார் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி பயிலுநர்களில் பெரும்பாலானோர் அவரவர் கடமையாற்றும் பாடசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல் கிழக்கு மாகாணத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் பயிலுநர்களாக கடமையாற்றிய பட்டதாரி பயிலுநர்களில் பெரும்பாலானோர் அந்தப்பாடசாலைகளிலேயே அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆனால், ஆயிரம் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக தரமுயர்த்தும் வேலைத் திட்டத்தின் கீழ் அண்மையில் கிழக்கு மாகாணத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய பட்டதாரி பயிலுநர்கள் மட்டும் அங்கிருந்து அகற்றப்பட்டு, வேறு திணைக்களங்களுக்கு நிரந்தர நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இது இவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் பெரும் அநீதியாகும். கிழக்கில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றி வந்த பட்டதாரிப் பயிலுநர்கள் அந்தப் பாடசாலைகளிலேயே நிரந்தரமாக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் விரும்பினால் மாத்திரமே வேறு திணைக்களங்களுக்கு இணைக் கப்படல்வேண்டும்.

ஏனைய மாகாணங்களில் இந்நடைமுறை பின்பற்றப்பட்டுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தில் மட்டும் அநீதி இழைக்கப்பட்டிருப்ப மிகவும் கவலைக்குரிய விடயமாகும்- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# திருகோணமலையில் மீண்டும் அதிகரிக்கும் தொற்றாளர்கள்!

திருமலை, ஜன. 21

திருகோணமலை மாவட்டத்தில் மீண்டும் கொரோனா தொற்றாளர்களின் வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனடிப்படையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனை மூலம் 18 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதில் கந்தளாய் பேராறு பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வயதுடைய இரட்டை குழந்தைகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தம்பலகாமம் ,கன்னியா ,நிலாவெளி மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகம் போன்ற இடங்களில் தொற்றாளர்கள் மேலும் அதிகரித்து வருவதாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமை நேர வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

பொதுமக்கள் வைத்தியசாலைக்கு வரும்போதும் பாதுகாப்பாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி முகக் கவசங்கள் அணிந்து வருகை தருமாறும் மக்கள் அதிகம் நடமாடும் இடங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அக்கரைப்பற்று மாநாகர சபையின் இரும்புக் கடவைக் கம்பிகள் திருட்டு

## பொலிஸாரால் ஒருவர் கைது

மட்டக்களப்பு, ஜன. 21

அக்கரைப்பற்று மாநாகர சபைக்குச் சொந்தமான வடிகானில் போடப்பட்டிருந்த இரும்பிலான கடவை கம்பிகளைத் திருடிய குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.

மாநகர சபையால் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து மேற்கொண்ட விசாரணையின் போது, குறித்த நபர் கைது செய்யப்பட்டார் எனவும், இதனுடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் எனவும் இவரை கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பரிசோதகர் மேலும் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து இரும்புக் கம்பி கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் திருடப்பட்ட இரும்புக் கம்பி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்ட கோவிட் சடலங்களின் எண்ணிக்கை 3353 ஆக அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜன. 21

கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களில் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலங்களின் எண்ணிக்கை 3353 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்கள் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் மேலும் ஒன்பது பேரின் சடலங்கள் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள் - 04

பௌத்தர்கள் - 05

இதையடுத்து அங்கு இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள கொவிட்-19 சடலங்களின் எண்ணிக்கை 3353 ஆக அதிகரித்துள்ளது.

# ஜெயந்திபுரத்தில் வாள்வெட்டு; 7 பேர் பொலிஸாரினால் கைது

மட்டக்களப்பு, ஜன. 21

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள ஜெயந்திபுரத்தில் பெண் ஒருவரின் உறவினர் மீது மேற்கொண்ட வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் வாள்வெட்டு குழுவைச் சேர்ந்த 7 பேரை வாள் கத்தியுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்துள்ளனர் என தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள சேர்ந்த பெண் ஒருவரை இளைஞர் ஒருவர் காதலித்து வந்துள்ளதாகவும் அப்பெண்ணுக்கு விருப்பமில்லாத நிலையில் அவரை இளைஞர் பின் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து வந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதனால் பெண்ணின் உறவினருக்கும் குறித்த இளைஞனுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு வந்துள்ளது

இந்த நிலையில் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை குறித்த பெண்ணை காதலித்து வரும் இளைஞர் அவரது குழுவினருடன் பெண்ணின் உறவினர் மீது மேற்கொண்ட வாள் வெட்டுத் தாக்குதல் சம்பவத்தில் பெண் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடி தலைமறைவாகி இருந்த நிலையில் 7 பேரை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு பொலிஸார் கைது செய்ததுடன் அவர்களிமிருந்து வாள் மற்றும் கத்திகளையும் மீட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தேசப்பற்றை உடம்பில் பூசிய ராஜபக்ஷவினர் நாட்டு வளங்களை விற்பனை செய்கிறார்கள்!

## ஜே.வி.பியின் தலைவர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 21

தேசப்பற்றை உடம்பில் பூசிக்கொண்ட ராஜபக்ஷவினர் நாட்டின் வளங்களை விற்பனை செய்து, மக்களுக்கு நாட்டை இல்லாம் ஆக்கியுள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய வளமான திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கும் உடன்படிக்கை திரும்ப பெறுமாறு கோரி கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் மக்களின் பெறுமதியான வளங்களை ஒன்றென்றாக விற்பனை செய்து வருகிறது. பொருளாதாரத்தின் கெடுதியான கொள்கைகளின் பிரதிபலனை நாடு எதிர்நோக்கி வருகின்றது. இயற்கை வளங்கள் மற்றும் எரிசக்தி துறையில் அரசாங்கம் கை வைத்துள்ளது. அவற்றை விற்பனை செய்து வருகிறது.

300 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முக்கியமான கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் மீது கை வைக்கப்பட்டு விட்டது.

அதன் முக்கியமான பங்குகள் அமெரிக்காவில் இருந்து வந்த ஜனாதிபதி கோட்டாபய மற்றும் அமெரிக்கரான பஸில் ராஜபக்ஷ ஆகியோர் விற்பனை செய்துள்ளனர்.

மின்சார சபையின் ஊழியர் தற்போதும் அந்த உடன்படிக்கைக்கு எதிராக போராடி வருகின்றனர். இதற்கு நாங்கள் கூடிய ஒத்துழைப்புகளை வழங்குவோம். அரசாங்கம், துறைமுகத்தின் 13 ஏக்கர் நிலத்தை சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்க முயற்சித்து வருகின்றது.

தேசப்பற்றை உடம்பில் பூசிக்கொண்ட எரிசக்தி அமைச்சர் அண்மையில் இந்திய நிறுவனத்துடன் உடன் படிக்கையை செய்து, திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்கியுள்ளார்.

அதேபோல் பெறுமதியான கட்டடங்களை அரசாங்கம் விற்பனை செய்ய முயற்சித்து வருகின்றது. தேசப்பற்றை பூசிக்கொண்டே தற்போது அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

அப்படி தேசப்பற்றை உடம்பில் பூசிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம், துறைமுக, மின் உற்பத்தி நிலையம், பெறுமதியான கட்டடங்கள், எண்ணெய் தாங்கிகள் ஆகியவற்றின் உரிமையை மக்களுக்கு இல்லாமல் ஆக்கியுள்ளது-என்றார். (அ)

# முகக்கவசம், தடுப்பூசி அட்டை இனிமேல் கட்டாயம் இல்லை!

## கட்டுப்பாடுகளை அதிரடியாக நீக்குகிறது இங்கிலாந்து

லண்டன், ஜன. 21

இங்கிலாந்தில் டெல்டா மற்றும் ஒமைக்ரோன் திரிவு கொரோனா வைரஸ் பரவலால் தினசரி ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட தொற்று நோயாளர்கள் பதிவாகி வரும் நாட்டில் அமுலில் உள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தும் அறிவிப்பை பிரதமர் பொரிஸ் ஜோண்சன் வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் 27-ஆம் திகதி முதல் இங்கிலாந்தில் முகக்கவச கட்டாய நடைமுறை நீக்கப்படும். அத்துடன், பொது இடங்களில் நடமாட தடுப்பூசி சான்றிதழ் தேவையில்லை எனவும் பிரதமர் பொரிஸ் ஜோண்சன் தெரிவித்துள்ளார்.

மேலும் வகுப்பறைகளில் முகக்கவசம் கட்டாயம் என்ற கட்டுப்பாடும் உடனடியாக நீக்கப்பட்டது.



தொற்று நோய் சற்றும் அடங்காத நிலையில் கட்டுப்பாடுகளை தளர்த்த உள்ளதாக பிரதமர் பொரிஸ் ஜோண்சன் அரசு நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளமை கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 108,069 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 359 பேர் நேற்று முன்தினம்உயிரிழந்தனர்.

இவ்வாறான நிலையிலேயே கொரோனா கட்டுப்பாடுகளை தளர்த்தும் அறிவிப்பை பிரதமர் பொரிஸ் ஜோண்சன் பாராளுமன்றில் வெளியிட்டார்.

அத்துடன் இனிமேல் வீட்டில் இருந்து வேலை செய்யும்படி மக்களை அரசாங்கம் கேட்காது என்றும் மக்கள் அலுவலகத்துக்கு திரும்புவதற்கான ஏற்பாடுகள் குறித்து தங்கள் முதலாளியிடம் பேச வேண்டும் என்றும் ஜோண்சன் கூறினார்.

பூஸ்டர் தடுப்பூசி திட்டம் முழுவதும் பிரிட்டன் முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதை அடுத்து கட்டுப்பாடுகள் விலக்கிக் கொள்ளப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)



# தலிபான் தளபதி உட்பட 6 பேர் ஆப்கானில் சுட்டுக் கொலை!

காபூல், ஜன. 21

ஆப்கானிஸ்தானில் தலிபான் தளபதி, அவரது மகன் உள்ளிட்ட 6 பேர் கூட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தலிபான் அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு குனார் மாகாணம் - நரங் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

தனிப்பட்ட விரோதம் காரணமாகவே இந்த துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளதாக தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில் காஸெமி பகுதியில் ஒரு மருத்துவர் மற்றும் அவரது சாரதி ஆகியோர் காரிலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். கடந்த வாரம், 25 வயது இளம்பெண் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மகளின் இறப்புக்கு நீதி கேட்ட தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# பிரபல இளம் சினிமா நட்சத்திரம் பனிச் சறுக்கு விபத்தில் மரணம்!

## துயரில் பிரெஞ்சுத் திரையுலகம்

பரிஸ், ஜன. 21

பிரான்ஸின் பிரபல இளம் சினிமா நட்சத்திரம் காஸ்பார்ட் உல்லியேல் பனிச் சறுக்கு விளையாட்டு விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

37 வயதான காஸ்பார்ட் நாட்டின் தென் கிழக்கு மாவட்டமான சவேய் மலைப் பகுதியில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த சமயம் மற்றொரு வீரருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார். தலையில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவரோடு மோதுண்ட வீரருக்கும் படுகாயமேற்பட்டுள்ளது.

காஸ்பார்டின் அகால மறைவு பிரான்ஸ் சினிமா உலகைப் பெரும் துயரில் ஆழ்த்தியிருக்கிறது. சினிமா கலைஞர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை இரங்கல் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

“சினிமா அவனோடு கூடவே வளர்ந்தது” என்று பிரதமர் ஜீன் காஸ்ரோ தனது அஞ்சலிப் பதிவில் தெரிவித்திருக்கிறார்.

“வசீகரமும் ஆற்றலும் நிறைந்த ஒரு மாபெரும் திறமைசாலியைப் பிரெஞ்சு சினிமா உலகம் இழந்து விட்டது” என்று நிதியமைச்சர் புறுனோ லூ மேயர் தனது ருவிட்டர் பதிவில் எழுதியிருக்கிறார்.

காஸ்பார்ட் உல்லியேல் பாரிஸின் புற நகரில் நவம்பர் 25, 1984 இல் பிறந்தவர். தனது பதினோராவது வயதில் இருந்தே திரைகளில் தோன்றியவர். பிரான்ஸின் சினிமா நட்சத்திரங்களில்

முன்னணியில் - சில சமயங்களில் உச்சத்தில் - இருந்தவர். 2007 இல் வெளியாகிய

"Hannibal Rising" படத்தின் மூலம் உலக அளவில் கவரப்பட்ட நட்சத்திரமாக மாறினார்.

ஒஸ்காருக்கு நிகரான



பிரெஞ்சுத் திரைக் கலைத் துறை விருதாகிய ”சீசர்” விருதை மிக இளம் வயதில் இருமுறை வென்றவர்.இயக்குநர் சேவியர் டோலன்

இயக்கிய ‘இட்ஸ் ஒன்லி தி எண்ட் ஆஃப் தி வேர்ல்ட்’ திரைப்படத்தின் பாத்திரத்துக்காக சிறந்த நடிகருக்கான சீசர் விருது 2017 இல் காஸ்பார்டுக்கு வழங்கப்பட்டது. அதற்கு

முதல் 2004 இல் "A Very Long Engagement" படத்துக்காக மிகவும் நம்பிக்கைக்குரிய நடிகருக்கான சீசர் விருதும் அவருக்குக் கிடைத்திருந்தது.

சினிமாவில் மட்டுமன்றி ஒரு விளம்பர மொடலாகவும் சர்வதேசம் எங்கும் புகழ் பெற்றவர். அவரது விளம்பரத் தோற்றங்களில் ‘சனல் ஆஃப்டர் ஷேவ்’ உலகளவில் அறியப்பட்ட ஒரு முகமாக அவரை மாற்றியிருந்தது.

ஆறு வயதில் நாயினால் கடியுண்டதில் அவரது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. அந்த ஆழத் தழும்பே தனது முக வசீகரத்துக்கு உதவியது என்று கூறிவந்தார்.

பிரெஞ்சு சினிமாவின் ‘விசித்திரமான புன்னகை’ முகம் என வர்ணிக்கப்பட்டு வந்த காஸ்பார்ட், விரைவில் வெளியாக இருக்கின்ற பிரபலமான தொலைக்காட்சித் தொடரான ‘மூன் நைற் ‘தொடரில் நடிக்கிறார். அந்தத் தொடரின் முன்னோட்டம் இணையத்தில் வெளியிடப்பட்டு ஒரிரு நாள்கள் கடந்த நிலையில் காஸ்பார்ட் உல்லியேலின் அகால மரணம் சம்பவித்துள்ளது. (அ)

# உதவிப் பொருட்களுடன் முதல் விமானம் டொங்காவில் நேற்று தரையிறங்கியது!



நுக்குவாலோபா, ஜன. 21

எரிமலை வெடிப்பு மற்றும் சுனாமி அலைத் தாக்கங்களால் கடுமையாக பாதிக்கப்பட்ட பசிபிக் நாடான டொங்காவுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிக்கொண்டு முதல் வெளிநாட்டு உதவி விமானம் நேற்று அங்கு சென்றடைந்தது.

டொங்காவுக்கு விமானம் மூலம் உதவிப் பொருட்கள் மற்றும் மீட்புக் குழுக்களை அனுப்பும் நோக்கில் அங்குள்ள முக்கிய விமான நிலைய ஓடுபாதையில் இருந்து சாம்பலை அகற்றும் பணியில் மீட்புக் குழுக்கள் கடந்த சில நாட்களாக தீவிரமாக ஈடுபட்டன. ஓடுபாதையில் இருந்து சாம்பலை அகற்றிய பின்னர் உதவிப் பொருட்களுடன் நியூசிலாந்து விமானம் நேற்று தரையிறங்கியது. நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளில் இருந்து ஏற்கனவே உதவிப் பொருட்களுடன் கப்பல்கள் டொங்கா நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. தொடர்ந்து ஏனைய விமானங்களில் உதவிப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படும் என இரு நாடுகளும் தெரிவித்துள்ளன.

பசிபிக் பெருங்கடல் நாடான டொங்கா அருகே கடலுக்கு அடியில் வெடித்த எரிமலையைத் தொடர்ந்து அங்கு பெரும்பாலான இடங்களில் சாம்பல் படிந்துள்ளது. இதனால் நீர் நிலைகள் மாசடைந்து குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே முதல் விமானம் நேற்று அங்கு சென்றடைந்தது.

இந்த விமானத்தில் தண்ணீர் கொள்கலன்கள், தற்காலிக தங்குமிடம் அமைக்கத் தேவையான பொருட்கள், மின்சார ஜெனரேட்டர்கள், மருந்துகள் மற்றும் தகவல் தொடர்பு கருவிகள் ஆகியவை எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் இருந்தும் இரண்டு போயிங் விமானங்கள் உதவிப் பொருட்களுடன் நேற்று புறப்பட்டன. (அ)

# உக்ரைன் மீது படையெடுக்கும் ரஷ்யாவின் முயற்சி பேரழிவையே தரும்!

## பைடன் எச்சரிக்கை

வொஷிங்டன், ஜன. 21

உக்ரைன் மீது விரைவில் படையெடுத்து அந்த நாட்டைக் கைப்பற்ற ரஷ்யா முனையும் எனக் கருதுவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார். அவ்வாறான நடவடிக்கை ரஷ்யாவுக்கு பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மாநாட்டில் இவ்வாறு பைடன் எச்சரிக்கை விடுத்தார்.

எனினும், உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தால் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் அதற்கு எத்தகைய பதில் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெளிவுபடுத்தவில்லை.

உக்ரைன் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றும் முயற்சியில் ரஷ்ய ஜனாதிபதி புடின் ஈடுபடுவார் என்பதே எனது கணிப்பு. ஆனால் இந்த நடவடிக்கை ரஷ்யாவுக்கு பேரழிவுகளை ஏற்படுத்தும் என பைடன் கூறினார்.

எனினும் உக்ரைன் மீது படையெடுக்க தயாராகி வருவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ரஷ்ய அதிகாரிகள் மீண்டும் மீண்டும் மறுத்து வருகின்றனர்.

ஆனால் உக்ரைனின் எல்லைகளுக்கு அருகே சுமார்100,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளது.

இது நேட்டோ கூட்டணியில் உக்ரைன் இணைவதை தடுத்து நிறுத்தும் வகையில் அந்த நாட்டின் மீது போர் தொடுப்பதற்கான ஏற்பாடு என மேற்கு நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இந்நிலையில் ரஷ்ய இராணுவம் உக்ரைனுக்குள் நுழைந்தால் அமெரிக்கா உள்ளிட்ட கூட்டணி நாடுகளின் ஒன்றிணைந்த பதிலடியை ரஷ்யா எதிர்கொள்ளும் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி கூறினார்.

இதேவேளை, உக்ரைன் மீது படையெடுத்து அந்நாட்டை ரஷ்யா கைப்பற்ற முயன்றால் ரஷ்யா மீது பரந்த பொருளாதார தடைகளை உடனடியாக விதிப்பதற்கான திட்டங்களை பைடன் நிர்வாகம் வகுத்துள்ளது.

இவ்வாறான தடையால் ரஷ்ய நிறுவனங்கள் அமெரிக்க டொலரைப் பயன்படுத்தும் திறனை இழக்கக்கூடும் எனவும் ஜென் சாகி தெரிவித்தார்.

இதேவேளை, உக்ரைன் ஒருபோதும் நேட்டோ கூட்டணியில் இணையாது. அத்துடன், உக்ரேனிய மண்ணில் அணு ஆயுதங்கள் நிலைகள் நிலைநிறுத்தப்படாது என்ற உத்தரவாதங்களை தன்னிடம் புடின் கோரியதாக ஜோ பைடன் தெரிவித்தார். (அ)

# இந்தியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்க அணி!

இந்திய அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் தென்னாபிரிக்க அணி 31 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை தென்னாபிரிக்காவின் பார்ல் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான மலன் 6 ஓட்டங்களிலும், குயின்டன் டி காக் 27 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

மார்க்ராம் 4 ஓட்டத்தை மட்டுமே சேர்த்து ரன் அவுட் ஆகி ஏமாற்றமளித்தார். ஆனால், அணித்தலைவர் டெம்பா பவுமா - ராசி வான் டெர் டுசன் ஜோடி நங்கூரம் போன்று நிலைத்து நின்று இந்திய பந்து வீச்சை அடித்து நொருக்கி அணியின் ஓட்ட எண்ணிக்கையினை மளமளவென உயர்த்தினர்.

அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இருவரும் சதம் விளாசினர். தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 296 ஓட்டங்களை குவித்தது. டெம்பா பவுமா 110 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

ராசி வான் டெர் டுசன் 129 ஓட்டங்களுடனும், டேவிட் மில்லர் 2 ஓட்டங்களுடனும், களத்தில் இருந்தனர். இந்திய தரப்பில் பும்ரா 2 விக்கெட்டுகளும், அஷ்வின் 1 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து 297 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய இந்தியா, முதலில் கவனமாக ஆடி ஓட்டங்களை சேர்த்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கே.எல்.ராகுல் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும், ஷிகர் தவான்- விராட் கோலி இருவரும் பொறுப்புடன் விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். தவான் அரை சதம் கடந்து, தனது ஆட்டத்தை தொடர்ந்தார்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 138 ஆக இருந்த நிலையில் இந்த ஜோடியை மகராஜ் பிரித்தார். அவரது ஓவரில் ஷிகர் தவான் ஆட்டமிழந்தார். ஷிகர் தவான் மொத்தம் 84 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகளுடன் 79 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்திருந்தார். மறுமுனையில் அரை சதம் கடந்த விராட் கோலி 51 ஓட்டங்களை பெற்றிருந்த போது பெவிலியன் திரும்பினார்.

அதன்பின்னர் களமிறங்கிய வீரர்கள் எதிர்பார்த்த அளவுக்கு அதிரடியாக ஆடத் தவறியதால் ரன்ரேட் வெகுவாக சரிந்தது. சீரான இடைவெளியில் விக்கெட்டுகளும் சரிந்தன.

நெருக்கடியாக கடைசிக் கட்டத்தில் கடுமையாக போராடிய ஷர்துல் தாக்கூர் அதிரடியாக விளாசினார். எனினும், இந்திய அணியால், 50 ஓவர் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 265 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. ஷர்துல் தாக்கூர் 43 பந்துகளில், 5 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 50 ஓட்டங்களை குவித்தார்.

(அ)



# மக்ஸ்வெல் அதிரடி

பிக் பேஷ் ரி-20 தொடரின் 56ஆவது லீக் போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 106 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் நேற்று (புதன்கிழமை) நடைபெற்ற இப்போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி யும் ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயள சுழற்சியில் வெற்றி பெற்ற ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 273 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பிக் பேஷ் ரி-20 கிரிக்கெட்டில் அணியொன்று பதிவு செய்த அதிகப்பட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, க்ளேன் மக்ஸ்வெல் ஆட்டமிழக்காது 154 ஓட்டங்களையும் மார்கஸ் ஸ்டொயினிஸ் ஆட்டமிழக்காது 75 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியில் க்ளேன் மக்ஸ்வெல் ஆட்டமிழக்காது 154 ஓட்டங்களை பெற்றுக்கொண்டதே பிக் பேஷ் ரி-20 கிரிக்கெட்டில் வீரரொருவர் பதிவுசெய்த அதிகப்பட்ச ஓட்டமாகும்.

ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜோஸ் கான் மற்றும் தொம்ப்சன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 274 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ஹோபர்ட் ஹரிகேன்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 167 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 106 ஓட்டங்களால் அபார வெற்றியை பதிவுசெய்தது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பென் மெக்டர்மோட் 55 ஓட்டங்களையும் ஆர்ஸி ஷோர்ட் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியின் பந்துவீச்சில், பிராடி கோச் 3 விக்கெட்டுகளையும் வெப்ஸ்டர், டொம் ஓ கோனல் மற்றும் கிளின்ட் ஹின்ச்லிப் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 64 பந்துகளில் 4 சிக்ஸர்கள் 22 பவுண்ரிகள் அடங்களாக ஆட்டமிழக்காது 154 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட க்ளேன் மேக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார்.

# பராலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு புதிய வீடு

ரோக்கியோவில் நடைபெற்ற 2020 பராலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் புதிய உலக சாதனையை நிலைநாட்டி இலங்கைக்காக தங்கப் பதக்கத்தை வென்ற தினேஷ் பிரியந்த ஹேரத் துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் வீடொன்று பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

பராலிம்பிக் வரலாற்றில் தங்கப் பதக்கம் வென்ற இலங்கை வீரர் தினேஷ் பிரியந்தவுக்கு புதிய வீடு பரிசாக வழங்கப்படும் என்று பிரதமர் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தெரிவித்திருந் தார்.

இந் நிலையிலேயே நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான கொழும்பு 02, கொம்பனி வீதி, மெட்ரோ ஹோம்ஸ் வீடமைப்புத் திட்டத்தின் 40 A 4/10 இல் உள்ள வீடு தினேஷ் பிரியந்த ஹேரத்துக்கு பிரதமரினால் வழங்கப்பட்டது.



(அ)

# சனத் ஜயசூரியவுக்கு கொரோனா

லெஜெண்ட்ஸ் கிரிக்கெட் லீக் தொடரில் பங்கேற்கவிருந்த இலங்கை கிரிக்கெட் அணியின் ஜாம்பவானான சனத் ஜயசூரியவுக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி வீரரான சனத் ஜயசூரிய கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதால் லெஜெண்ட்ஸ் கிரிக்கெட் லீக் தொடரில் பங்கேற்கும் ஏஷியா லயன்ஸ் அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என தெரியவருகிறது.

(அ)

# ஐ.சி.சி. இருபதுக்கு-20 அணியில் ஹசரங்க

ஐ.சி.சி. இருபது - 20 அணியில் இலங்கையின் சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க பெயரிடப்பட்டுள்ளார்.

துடுப்பாட்டம், பந்துவீச்சு, அல்லது சகலதுறைகளில் தங்களது அதிசிறந்த ஆற்றல்களை கடந்த வருட சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டிகளில் வெளிப்படுத்திய 11 வீரர்கள் ஐ.சி.சியினால் அடையாளம் காணப்பட்டு வருடத்தின் அணியில் பெயரிடப்பட்டுள்ளனர்.

சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டிகளில் அதிசிறந்த சுழல்பந்து வீச்சாளராக தன்னை உயர்த்திக்கொண்ட வனிந்த ஹசரங்க துடுப்பாட்டத்திலும் சிறந்த பங்களிப்பு வழங்கக்கூடியவர்.

கடந்த வருடம் முழுவதும் திறமையை வெளிப்படுத்திய வனிந்து ஹசரங்க, ஐக்கிய அரபு இராச்சியத்திலும் ஓமானிலும் கடந்த வருடம் நடைபெற்ற இருபது 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின்போது உச்ச நிலையை அடைந்தார்.

உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஹட்ரிக் அடங்கலாக மொத்தம் 16 விக்கெட்களைக் கைப்பற்றிய ஹசரங்க, அதிக விக்கெட்களைக் கைப்பற்றிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

மேலும் கடந்த வருடம் 20 போட்டிகளில் விளையாடிய ஹசரங்க மொத்தமாக 36 விக்கெட்களைக் கைப்பற்றியதுடன் துடுப்பாட்டத்தில்196 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

இவர் ஐ.சி.சி வருடத்தின் இருபது 20 அணியில் 7ஆம் இலக்க வீரராக இடம்பெறுகின்றார்.

பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாம் தலைவராக பெயரிடப்பட்டுள்ள இந்த அணியில் இந்திய வீரர்கள் எவரும் இடம்பெறவில்லை.

ஐசிசி அணியில் இடம்பெறும் வீரர்கள் துடுப்பாட்ட வரிசை பிரகாரம்:-

ஜொஸ் பட்லர் (இங்கிலாந்து - உலகக் கிண்ணத்தில் அதிகூடிய 269 ஓட்டங்கள்).

மொஹமத் ரிஸ்வான் (பாகிஸ்தான் - விக்கெட் காப்பாளர் - 2021இல் 29 போட்டிகளில் 1,326 ஓட்டங்கள்).

பாபர் அஸாம் (தலைவர்- பாகிஸ்தான் - 2021இல் 29 போட்டிகளில் 939 ஓட்டங்கள்).

ஏய்டன் மார்க்ராம் (தென் ஆபிரிக்கா - 2021இல் 18 போட்டிகளில் 570 ஓட்டங்கள்).

மிச்செல் மார்ஷ் (அவுஸ்திரேலியா - 2021இல் 21 போட்டிகளில் 627 ஓட்டங்கள், 8 விக்கெட்கள்)

டேவிட் மில்லர் (தென் ஆபிரிக்கா - 2021இல் 17 போட்டிகளில் 377 ஓட்டங்கள்).

வனிந்து ஹசரங்க டி சில்வா (இலங்கை - இ-20 பந்துவீச்சு தரவரிசையில் 1ஆம் இடம்).

தப்ரெய்ஸ் ஷம்சி (தென் ஆபிரிக்கா - 2021இல் 22 போட்டிகளில் 36 விக்கெட்கள். இ20 பந்துவீச்சு தரவரிசையில் 2ஆம் இடம்)

ஜொஷ் ஹேஸ்ல்வூட் (அவுஸ்திரேலியா - 2021இல் 15 போட்டிகளில் 23 விக்கெட்கள்).

முஸ்தாபிஸ்ர் ரஹ்மான் (பங்களாதேஷ் - 2021இல் 20 போட்டிகளில் 28 விக்கெட்கள்).

ஷஹீன் அப்றிடி (பாகிஸ்தான் - 2021இல் 21 போட்டிகளில் 23 விக்கெட்கள்)



# நான்கு விபத்துக்களில் நால்வர் பரிதாபச் சாவு!

கொழும்பு, ஜன. 21

நாட்டில் நான்கு பிரதேசங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி வீதி, வராகுமர பிரதேசத்தில், வானொன்று பாதசாரி பெண்ணொருவர் மீது மோதியதில் பாதசாரி பெண் மரணமடைந்தார்.

வரக்காமுர, உக்குவெல பிரதேசத்தை சேர்ந்த 77 வயது பெண்ணே இவ்வாறு மரண மடைந்தார். வானின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம் மரதன்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மரதன்கடவல ஹபரண வீதியில் பஸ்ஸொன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரணமடைந்தார்.

அமுனிச்சிய, முரியாகடவல பிரதேசத்தை சேர்ந்த 27 வயது நபரே மரணமடைந்தார். பஸ்ஸின் சாரதியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பதுளை ஹாலிஎல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரவளை வீதி, உடுவர பிரதேசத்தில், பண்டாரவளையிலிருந்து பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வீதியில் சென்ற நாயின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது மரணமடைந்தார்.

கேபில்ல, பண்டாரவளை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயது நபரே உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. ஹாலிஎல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மஹவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிக்வரெட்டிய சியமலங்கமுவ வீதியில் மோட்டார் சைக்கிளொன்று பெண்ணொருவர் மீது மோதியதில் பெண் மரணமடைந்தார்.

கந்தவெத்த, இபலோகம பிரதேசத்தை சேர்ந்த 70 வயது பெண்ணே மரணமடைந்தார்.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிளின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (அ)

# வவுனியாவில் மொழி உரிமை திட்டமிட்டு அழிக்கப்படுகிறது

*சமூக ஒற்றுமைக்கான மக்கள் பேரவை குற்றச்சாட்டு*

வவுனியா, ஜன. 21

**வடக்கு, கிழக்கு மாநிலங்களில் அரசமைப்பில் அரச கரும மொழியாகத் தமிழ் மொழி அமுலாக்கப்பட்டுள்ளது. எனினும் எமது பகுதிகளிலுள்ள அரச நிர்வாகத்தினரால் திட்டமிட்ட முறையில் தமிழ் மொழி உரிமை அழிக்கப்பட்டு வருகின்றது என சமூக ஒற்றுமைக்கான மக்கள் பேரவையின் தலைவர் மாசிலாமணி ஆதங்கம் தெரிவித்துள்ளார் .**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வவுனியா மாவட்டத்தில் அரச நிர்வாகச் சேவையில் உள்ள அதிகாரிகள் தமது வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதவி நிலை விளம்பரப் பதாதையில் தமிழ் மொழியைப் புறக்கணித்து சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் காட்சிப்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிந்துள்ளது.

அண்மையில் இது குறித்து வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம், தங்களது வாகனத்தில் தமிழ்மொ ழிக்கு முன்னுரிமை வழங்கப்படவில்லை. ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அது தனது தனிப்பட்ட வாகனம் என்று தெரிவித்து விட்டுச் சென்றுவிட்டார்.

தற்போது எமக்கு இருக்கும் ஒரே பலம் மொழி உரிமையே. அதுவே எமது இனத்தின் அடையாளம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அரச கரும மொழிகள் அமைச்சராக வாசுதேவ நாணயக்கார நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த அமைச்சரினால் வவுனியா மாவட்ட செயலகத்தில் மொழி அமுலாக்கல் செயலணிக்கு 13 இலட்சம் ரூபா செலவில் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டு மிகப் பெரும் நிகழ்வாக அந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருந்தது .

தற்போது அந்த அலுவலகத்தினூடாக மொழி உரிமை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

எமது பகுதிகளில் எமது மொழி உரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்தி எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள சிங்கள மயமாக்கலைத்தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை இங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் மேற்கொள்ள முன்வரவேண்டும்-என்றார். (அ)

# விண்ணக வாழ்வில் ஆண்டுகள் பதின்மூன்று

மலர்வு
10 - 08 - 1932



உதிர்வு
21 - 01 - 2009

## திருமதி மரியதாசம்மா பீற்றர் திசநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியை)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

எமை அன்புடனும் பண்புடனும்
அகிலமதில் வாழ வழியமைத்து
நாம் கலங்கி நின்ற போது
எமக்கு உத்வேகம் தந்து
அரணாக நின்ற அன்னையே!
நல் ஆசானாய்,உடன்பிறப்பாய்
வழிகாட்டியாய் வாழ்ந்தீர்கள்.
இன்று நீங்கள் எம்முடனில்லை.
காலஓட்டத்தில் எமைப் பிரிந்து
ஆண்டுகள் பதின்மூன்றாகிற்று,
உங்கள் வழித்தடங்கள் என்றும்
எம்முடன் வாழும்.

உங்கள் ஆத்மா இறைசந்நிதியில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மகள், மருமகன், சகோதரி, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.**

# மானிப்பாய் பொதுச் சந்தையில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 21

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு, வடக்கு மாகாணத்தின் முதலாவது டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று மானிப்பாய் பொதுச்சந்தையில் முன்னெடுக்கப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் இந்த நிகழ்வு ஆரம்பமாகி டெங்கு விழிப்புணர்வு வாசகங்கள் உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து எஸ்.ரி.குமரனின் நெறிப்படுத்தலில் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான வீதி நாடகம் நடாத்தப்பட்டது.

பின்னர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் வடக்கின் பிரதம செயலாளருக்கிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்ட பின் சந்தையைச் சுற்றிய



வளாகத்தை சுத்தப்படுத்தியதுடன் குறித்த நிகழ்வு நிறைவுக்கு வந்தது.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன, சிறப்பு அதிதிகளாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம. பற்றிக் டிறஞ்சன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மு.சுலோச்சனா, சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.கிந்துஷா, வலி. தென்மேற்கு சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபை உறுப்பினர் கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 21

கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா தொற்று அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கர்ப்பிணிகள் நெரிசலான இடங்களில் கூடுவதைத் தவிர்க்க வேண்டும் என சுகாதாரத்துறையினர் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த இரண்டு அல்லது மூன்று வாரங்களில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாங்கள் காண்கிறோம் என காசல் வீதி மகளிர் வைத்தியசாலையின் பிரசவம் மற்றும் நரம்பியல் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் தங்கள் முந்தைய சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள் கிறோம்.

எதிர்காலத்தில் நீண்ட வார விடுமுறை நாட்கள் வருவதால் பொது இடங்களில் மக்கள் கூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்கவும்.

விருந்துகள் மற்றும் விடுமுறைக்கு விடுதிகளுக்குச் செல்வதைத் தவிர்த்து விட்டு வீட்டில் தனியாக இருங்கள்.

இரண்டாவது கொரோனா தடுப்பூசி செலுத்தி மூன்று மாதங்கள் ஆகிவிட்டால் குறித்த தாய்மார்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி செலுத்துமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்-என்றார். (அ)

## தனியார் காணி...

வதை ஏற்றுக்கொள்ளமுடியாதென வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

கட்டுவன் - மயிலிட்டி வீதிப்புனரமைப்பு தொடர்பாக நேற்று ஊடகங்கள் கேள்வி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்குச் செல்லும் கட்டுவன் - மயிலிட்டி வீதி விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக காணப்பட்டிருந்தது.

தற்போது திடீரென வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளூராட்சிமன்றத்துக்கோ பிரதேச செயலகத்துக்கோ எந்த வித அறிவிப்பையும் செய்யாமல் இராணுவத்தினரின் உதவியுடன் அத்துமீறி மக்களின் காணி ஊடாக வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இராணுவத்தினர் தனியார் காணி ஊடாக வீதியை புனரமைப்பதனால் 9 பொதுமக்களின் ஏறத்தாழ 4 ஏக்கர் வரையான விவசாய நிலப்பகுதி துண்டாடப்படுகிறது.

வலி.வடக்கில் 3000 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் 7000 மக்கள் மீளக்குடியமரவேண்டியிருக்கின்றது. இது ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கு மாறான செயற்பாடாகவே காணப்படுகின்றது.

இன்றைய(நேற்று) வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த கூட்டத்தில் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டபோது இந்த வீதி புனரமைப்பு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் பொதுமக்களின் காணிகளை எந்த காலத்திலும் துண்டாட இடமளிக்க முடியாது.

தங்கள் முயற்சியால் இந்த வீதி விடுவிக்கப்படுவதாக ஊடகங்கள் வாயிலாக அங்கஜன் இராமநாதன், ஒரு கருத்தை தெரிவித்திருந்தார். இது பொய்யான செய்தி. தனியார் காணிகள் ஊடாக அத்துமீறிப் பாதையை ஏற்படுத்த முடியாது. உண்மையான வீதியூடாக அதனை செய்யவேண்டும். மக்கள் காணியூடாக வீதி அமைத்துவிட்டு வீதியை திறந்துவிட்டேன் என பொய்யான பரப்புரை செய்து மக்களை ஏமாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக அதை நிறுத்துவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் என்ற ரீதியில் அங்கஜன் இராமநாதன் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ-03)

## கோட்டாபய...

காப்பு என்று கூறி இவர் கள் ஆட் சிக்கு வந்தார் கள்.

இஸ்லாமிய சமூகத்தை இவர்கள் இப்போது துன்புறுத்துகின்றனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

நாட்டில் வாழ முடியாது என்று இங்குள்ள இளைஞர்கள் வெளிநாட்டுக் குச் தப்பிச் செல்கின்றனர். இளைஞர்கள் இங்கு இல்லை என்றால் எதிர்காலத்தில் இந்த நாட்டைப் பாதுகாப்பது யார்?

வாழும் மக்களிடம் பணம் இல்லை, நாட்டில் டொலர் இல்லை. கொரோனாவைக் காரணம் காட்ட வேண்டாம். உலக நாடுகளும் கொரோனாத் தொற்றுக்கு இலக்கியாகியுள்ளன. ஆனால், அங்குள்ள மக்கள் வரிசையில் நிற்க வில்லை-என்றார். (அ)

## வடக்கு - கிழக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெற்ற தென்னிலங்கையின் வாக்குகளை பொறுத்தவரை, அது மொத்த வாக்குகளில் 60 சதவீதமாகும்.

எனினும் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் சமஷ்டி தீர்வுடன் கூடிய தமிழ் தேசத்துக்காக தமிழ்க் கட்சிகள் பெற்ற வாக்குகள் 75 சதவீதத்துக்கும் அதிகமான தாகும்.

அதிலும் வடக்கு-கிழக்கில் தெரிவாகி, அரசாங்கத்துடன் இணைந்துள்ள ஐந்து பேரில் மூன்று பேர் தமிழ்த் தேசத்தின் உரிமைகளுக் காகவே வாக்குகளை கேட்டனர்.

இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒவ்வொரு தேர்தல் சுவரொட்டியிலும் தமிழ் மக்களுக்கான உரிமைகள் தொடர்பான கோரிக்கைகள் அடங்கியிருந்தன.

எனவே பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களை இழந்த நிலையில் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் மக்கள் அளித்த ஆணையை கைவிட்டு, கோட்டாபயவின் இனவாத நிகழ்ச்சி நிரலுக்கு வடக்கு-கிழக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவு தரமாட்டார்கள்.

இந்தநிலையில் ஜனாதிபதியும், தமிழ் மக்களின் ஆணையை கைவிட்டு அரசாங்கத்தின் இனவாத கொள்கைக்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கமுடியாது-என்றார். (அ)

## அமைச்சர்கள்...

நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் தலைவர்கள் புத்திசாலித்தனமாகச் செயற்பட வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்தில் அல்லது ஆளும் கட்சிக் கூட்டத்தில் மாத்திரமே தமது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டும்.

இந்நாட்டு மக்கள் எங்களுக்கு வாக்களித்தது ஒவ்வொருவரும் அரசனாக்குவதற்கு அல்ல. எனவே ஜனாதிபதியை தெரிவு செய்தால் அந்த ஜனாதிபதியின் கொள்கையை பின்பற்றவேண்டும்.

நாம் அனைவரும் தனித்து ஆட்சியமைக்க முயலாமல் மக்களை ஆள முயற்சித்தால் சிறப்பாக இருக்கும். தற்போது உலகளாவிய ரீதியில் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் நோய் பரவல் ஏற்பட்டுள்ளது.

நோய் தொற்று காரணமாக உலக அளவில் பொருளாதார பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. நமது நாட்டின் பொருளாதாரத்தில் சில பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்த நேரத்தில் நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே அரசனாவதற்கு போராடுவதை விடுத்து, மக்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றினால் இந்நாட்டு மக்களை அரசர்களாக முடியும். எனவே, தனிப்பட்ட கருத்துகளை ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்றவேண்டும்-என்றார். (அ)

## தீர்க்கமான...

தலைமையிலான அரச கூட்டணியில் அங்கம் வகித்தாலும், அரசின் செயல்பாடுகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடுமையாக விமர்சித்து வருகின்றது. இதனால் மொட்டு கட்சிக்கும், சுதந்திரக்கட்சியினருக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டுள்ளது.

அரசுக்குள் இருந்துகொண்டு, சலுகைகளை அனுபவித்தபடி விமர்சிப்பதை விட, கௌரவமாக வெளியேறுங்கள் என சுதந்திரக்கட்சியினருக்கு மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் பதிலடி கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் புதியதொரு கூட்டணியை கட்டியெழுப்புவதில் சுதந்திரக் கட்சியினர் தீவிரம் காட்டிவருகின்றனர். அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பில் சுதந்திரக்கட்சிக்குள்ளும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மகாநாயக்க தேரர்களை சந்தித்து, ஆலோசனை பெறத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் விரைவில் முடிவொன்றை எடுக்கவுள்ளார். அதற்காகவே அமைச்சரவை மறுசீரமைப்பைக்கூட அவர் பிற்போட்டுள்ளார் எனவும் தெரிய வருகின்றது. (அ)



# ஜனாதிபதியின் புதிய செயலாளர் கங்காராம விஹாரையில் வழிபாடு

ஜனாதிபதியின் புதிய செயலாளர் காமினி செனரத் நேற்று முன் தினம் பிற்பகல் கொழும்பு - ஹூணுபிட் டிய கங்காராம விஹாரைக்குச் சென்று மத வழிபாடுகளில் ஈடுபட்டார். விஹாரைக்கு வருகை தந்த காமினி செனரத், விஹா ராதிகாரி கலாநிதி வணக்கத்துக்குரிய கிரிந்தே அஸ்ஸஜி தேரரைச் சந்தித்து ஆசிபெற்றார்.

அதனைத் தொடர்ந்து மத வழிபாடுகளில் ஈடுபட்ட ஜனாதிபதியின் புதிய செயலாளருக்கு, மஹா சங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஆசிர்வதித்தனர். (அ)

## பிரிட்டனிலுள்ள...

வழங்குமாறு, ஐக்கிய இராச்சியத்தின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய அமைப்புக்கான அமைச்சர் தாரிக் அஹமட்டிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரிட்டன் அமைச்சர் தாரிக் அஹமட் ஜனாதிபதியை நேற்று சந்தித்துப் பேசினார்.

இதன்போதே ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் மிக முன்னேற்றகரமாக உள்ளன என்று இதன்பொது தெரிவித்த தாரிக் அஹமட், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கு, நடைமுறை மற்றும் இலக்குகளை அடையக்கூடிய அணுகுமுறைகளுடன் முன்னோக்கிச் செல்வதன் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து மனித உரிமை பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

"இலங்கை எதிர்நோக்கும் அனைத்துப் பிரனைகளுக்கும் தீர்வு காண்பதுடன், மக்கள் அனைவரும் ஒன்றாக வாழக் கூடிய சூழலை உருவாக்குவதே அரசின் நோக்கமாகும். அதற்கு, ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் புலம்பெயர் இலங்கையர்களுடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காகப் புலம்பெயர் மக்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் வழங்கு மாறும் அமைச்சர் தாரிக் அஹமட்டிடம் கேட்டுக்கொண்டார்.

ஐக்கிய இராச்சியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 2023இல் 75 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. இதற்காக ஒரு விழாவை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில், இரு நாடுகளின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் கலை, கலாசார நிகழ்வுகள் மற்றும் இரு நாட்டு மக்களுக்கு கிடையிலான தொடர்புகளை மேம்படுத்தும் வகையிலான நிகழ்வுகளை நடத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹூல்டன், முதன்மைச் செயலாளர் மத்யூ டெய்த், அமைச்சர் தாரிக் அஹமட்டின் உதவியாளர் இசபெல் ஸ்கொட், வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ். ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

## பிரிட்டன்...

பொன்று நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

## மனித...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து உரையாற்றும் போதே, அமைச்சர் தாரிக் அஹமட் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தி வலுத் துறையின் இலக்குகளை அடைவதற்கும் தொழில்நுட்பம்சார் தடைகளை வெற்றிகொள்வதற்கும் உதவுமாறு ஜனாதிபதி அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு உடனடியாக பதிலளித்த அஹமட், தனது நாட்டுக்குச் சென்றவுடன் இந்த விடயம் பற்றி கூடிய விரைவில் ஆராய்ந்து, அது தொடர்பான அனைத்து உதவிகளையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இலங்கைக்கான முதலீட்டு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் எனச் சுட்டிக்காட்டிய அவர், ஐக்கிய இராச்சியத்தில் வாழும் பல்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார ஊழியர்களுக்கு ஐக்கிய இராச்சியத்தில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. பொருளாதாரத் துறைக்கான ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதாகவும் தாரிக் உறுதியளித்தார். (அ)

## சாணக்கியனுக்கு...

அத்துடன், கடந்த சில நாட்களாக தன்னுடன் நெருங்கிப் பழகியவர்கள் இருப்பின், நோய் அறிகுறிகள் தென்படுமானால் கோவிட் பரிசோதனையை மேற்கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

## சுற்றுலாப்...

களை அதிகரிப்பது மத்திய வங்கியின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக வணிக வங்கிகள் இறக்குமதிப் பத்திரங்களை வழங்கும் போது, வங்கிக்கு கிடைக்கும் அந்நிய செலாவணிகளின் விகிதங்களுக்கு நிகராக பணத்தை வழங்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையானது நிரந்தர வைப்பு வசதிகளின் வீதத்தையும் நிரந்தர கடன் வசதி வீதத்தையும் தலா இலக்கம் 50 என்ற வகையில் 5.50 வீதமாகவும் 6.50 வீதமாகவும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு என்ன? பெப்ரவரிக்கு முன் தெரியப்படுத்துங்கள்!

## அரசிடம் கோருகிறார் ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜன. 21

**நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதா, அல்லது வேறு ஏதுவும் முறையான தீர்வு உள்ளதா என்பதனை பெப்ரவரி மாதத்துக்குள் அரசு பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற, ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்தி வைப்புவேளை இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் முன்னர் ஜீ.எஸ்.ரி. மற்றும் வற் வரி உள்ளிட்ட அனைத்து வரிகளையும் ஒரே பொருட்கள் சேவைகள் மீது அறவிடுகின்றனர். ஏதாவது ஒன்றையே அறவிட வேண்டும். அதேவேளை அனைத்து வரிகளையும் அரச வருமான வரி திணைக்களமே அறவிடவேண்டும். ஆனால் இப்போது நிதி அமைச்சு அதனை அறவிடுவது ஏன்?

இன்று பொருளாதாரத்தை பார்த்தால் பாரிய நெருக்கடிகள் உள்ளன. சிறிய வர்த்தகர்கள், குறைந்த வருமானம் உடையவர்களே இதனால் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையில் அரச கடனை பார்த்தால் 2019 ஆம் ஆண்டில் 13,000 பில்லியன் ரூபாவாக இருந்தது. ஆனால் 2021 ஜனவரி முதல் செப்டம்பர் வரையில் அது 17,000 பில்லியனாக அதிகரித்துள்ளது. இரண்டு வருடங்களில் எவ்வாறு 4 ரில்லியனால் அதிகரித்தது என்று கேட்கின்றோம். இந்த இடத்தில் பிரச்சனைகளை பார்க்க முடிகின்றது. அதேபோன்று மொத்த தேசிய உற்பத்தியில் 10 வீதம் கடனாக இருக்கின்றது.

இதேவேளை, அந்நிய செலாவணி மூலம் கடனுக்காக எதிர்வரும் 6 வருடங்களுக்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 6 பில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. பெப்ரவரி மாதத்துக்கு முன்னர் இது தொடர்பில் நிதி அமைச்சர் அறிவிக்கவேண்டும். நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதா? அல்லது ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்று வழிகளுக்கு செல்வதா? என்று கேட்கின்றேன். இந்தப் பிரச்சனையை தொடர விட முடியாது. இது தொடர்பாக அமைச்சரவையும் தீர்மானத்தை எடுத்து இந்த பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவேண்டும்.

பல வருடங்களாக இருந்த முறைமைகளை நீக்கியமையால் டொலர் நெருக்கடிகள் ஏற்பட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை மீதான நம்பிக்கை இல்லாது போயுள்ளது. இதற்கு குறுகியகால, மத்திய கால மற்றும் நீண்ட கால தீர்வுகள் வேண்டும்-என்றார். (அ)

# பால் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 21

பால் விவசாயிகளுக்கான பால் விலையினை லீற்றருக்கு 5 ரூபாவால் அதிகரிக்க மில்கோ நிறுவனம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் இந்த விலை அதி கரிப்பு அமுலுக்கு வரும் என வும் அந்த நிறுவனம் அறிவித் துள்ளது.

அறிக்கை ஒன்றின் மூலம் மில்கோ நிறுவனத்தின் தலைவர் இதனைத் தெரிவித்துள்ளார். (அ)

# மரண அறிவித்தல்



மலர்வு 04 - 05 - 1936

உதிர்வு 18 - 01 - 2022

## சின்னத்தம்பி தனபாலசிங்கம்

**(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, சவுதி அரேபியாவிலும் பணிபுரிந்தார்)**

யாழ். அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தனபாலசிங்கம் அவர்கள் 18.01.2022 செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மயில்வாகனம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், லில்லிமலர் அவர்களின் அன்புக் கணவரும், ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (கனடா), ஜெயவதனி (கனடா), ஜெயமாலா(இலங்கை), ஜெயராணி(கனடா) ஆகியோரின் அன்பு நிறைந்த தந்தையும், திருக்கேஸ்வரன் (கனடா), தயாபரன் (கனடா), தயாபரன் (கண்ணன்-இலங்கை), சதீஸ்வரன்(கனடா), புஸ்பமாலா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தங்கரத்தினம், காலஞ்சென்ற தவநாயகம், செல்வநாயகம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, ராஜேஸ்வரி(இலங்கை), மனோராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மதுஷன் (சுவிஸ்), மதுஷா(சுவிஸ்), ஜதுஷன்(இலங்கை), திவ்யா, சிறிஜா(கனடா), ஜெனுஷன், ஜெனுகா(சுவிஸ்), டெசானா, டெனிகா, டெபோறா(கனடா), அக்ஷயா(கனடா), அப்ஷரா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், அன்சிகா (சுவிஸ்) அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

*பார்வைக்கு :*
Sunday, 23 Jan 2022 6:00 PM - 9:00 PM
Monday, 24 Jan 2022 6:30 AM - 7:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை:*
Monday, 24 Jan 2022 7:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*தகனம்:*
Monday, 24 Jan 2022 9:00 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**திரு - மருமகன்**
**Mobile : +14162944178**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# சுருக்குவலை பயன்படுத்தி மீன்பிடித்த 9 மீனவர்கள் கடற்படையினரால் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 21

தடை செய்யப்பட்ட சுருக்கு வலையை பயன்படுத்தி மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட யாழ்ப்பாணம் மற்றும் உடப்பு, சிலாபம், கற்பிட்டியைச் சேர்ந்த 9 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு பருத் தித்துறை கடற்பரப்பில் இவர்கள் கைது செய்யப் பட்டதுடன் இவர்கள் பயணித்த நான்கு பட குகளும் 200 கிலோவுக்கு அதிகமான மீன் களும் கடற்படையினரால் மீட்க்கப்பட்டுள்ளது. (அ)

# களனிதிஸ்ஸ மின் நிலையத்துக்கான எரிபொருள் விநியோகப்பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 21

கனியவள கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட 10,000 மெற்றிக் தொன் எரிபொருள் களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்துக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் மேலதிக முகாமையாளரும், ஊடகப் பேச்சாளருமான அன்று நவமணி தெரிவித்தார்.

1,800 மெற்றி தொன் எரிபொருளை களஞ்சியப்படுத்துவதற்கான பணிகள் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன. இதனால், களனிதிஸ்ஸ வளாகத்தில் உள்ள இரண்டு மின் உற்பத்தி நிலையங்களும் மீள இயங்கி வருகின்றன.

மின் உற்பத்தி நிலையங்களுக்கு மீள எரிபொருள் கிடைத்துள்ளதால் மின்சார துண்டிப்பு இடம் பெறாது என இலங்கை மின்சார சபையின் மேலதிக முகாமையாளர் கூறினார்.

எவ்வாறாயினும், தொடர்ச்சியாக எரிபொருள் கிடைக்காதவிடத்து மின்சார துண்டிப்பு இடம்பெறும் என மின்சாரப் பொறியியலாளர் சங்கத்தின் உறுப்பினர் எரங்க குடாஹேவா தெரிவித்தார். (அ)

# புலமைப்பரிசில் மாணவரை ஆசீர்வதிக்கும் நிகழ்வு யாழில்

யாழ்ப்பாணம், ஜன. 21

புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் ஆசீர்வாத்ததுடன் அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தரம் ஐந்து மாணவர்களுக்காகன 2021 புலமைப் பரிசில் பரீட்சை கோவிட் 19 தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்ட நிலையில் நாளை சனிக்கிழமை காலை 9:30 மணிக்கு நடைபெறுவதற்கான பூர்வாங்க செயற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன.

பரீட்சைக்கு தோற்றம் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கும் நிகழ்வு நாடு பூராகவும் உள்ள பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைய தரம் ஐந்து மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு யாழ். மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்று இடம் பெற்றது. (அ-03)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சிலம்பாட்டம், துப்பாக்கி திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: ஜெபங்கேளும் திருகோணமலை நிகழ்ச்சி
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : அன்பியம் சனி மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (யாழ்ப்பாணம்)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (யாழ்ப்பாணம்)

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிலா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்